Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :187 வைகாசி 21ஆம் நாள் புதன்கிழமை 03 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



18

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து சந்தேகப்படும்படியாக எவராவது வருகை தந்து தங்கியிருந்தால் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது சுகாதார திணைக்களத்தின் அவசர அழைப்பெண்ணிற்கு (021 222 6666) அறியத்தருவோம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

ஜனாதிபதியின் அறிவிப்புக்கு எதிரான

# 8 மனுக்களும் தள்ளுபடி!

உயர் நீதிமன்றம் அதிரடி

கொழும்பு, ஜூன் 3

நாடாளுமன்றத்தைக் கலைக்கும்வகையில் ஜனாதிபதி விடுத்த வர்த்தமானியையும் எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த வர்த்தமானியையும் வலுவிழக்கச் செய்யக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8

02

உயர் நீதிமன்றின் முடிவை மதிக்கிறோம்

# தேர்தலுக்குத் தயார்

கூறுகின்றார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 3

"நாடாளுமன்றத் தேர்தலை சவாலுக்குட்படுத்தும் மனுக்கள் மீதான பரிசீலனையில் உயர்நீதிமன்றம் எடுத்துள்ள இறுதியான முடிவை நாம் மதிக்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த வேளையிலும் தயாராக இருக்கின்றது." என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

02

## அறுவை சிகிச்சை நிபுணர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர் சி. முகுந்தன்

02

## விதிகளை மீறியே தேர்தலில் போட்டி!

சட்டத்தரணி செலஸ்ரின் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 3

சட்டத்தரணி ஸ்ரெனிஸ்லஸ் செலஸ்ரின் தேர்தல் விதிமுறைகளை மீறியே தேர்தலில் போட்டியிடுகின்றார் என்று யாழ். மாநகரசபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான மு.றெமீடியஸ் தேர்தல் ஆணைக்

02

## பொதுத் தேர்தல் ஒகஸ்ட் 15 இல்?

இன்று கூடுகின்றது ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 3

நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியளவில் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள்

02

## நீதி வழி நடந்ததால் நியாயமான தீர்ப்பு

ஜனாதிபதி கோத்தாபய மகிழ்ச்சி

கொழும்பு, ஜூன் 3

"நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்தேன். இந்தநிலையில் அதனைச் சவாலுக்குட்படுத்தி அதனை வலுவிழக்கச்செய்யும் எதிரணியினரின்

02

## கொரோனா நேற்று 13

கொழும்பு, ஜூன் 3

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய பாதிப்படைந்தவர்களின் மொத்த

02

## மயங்கிய இளைஞன் சாவு

கொடிகாமம், ஜூன் 3

வரணியில் மயங்கி வீழ்ந்த இளைஞன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நாவற்காடு வரணியில் நேற்று

02

## பெண் போராளியின் எலும்புக் கூடு மீட்பு



கிளிநொச்சி, ஜூன் 3

முகமாலை முன்னரங்கில் நேற்றும் பெண் போராளியினுடைய எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. என்று தெரிவிக்கப்பட்டது.

12

## நீதிமன்றின் தீர்ப்பே இது! மக்களின் தீர்ப்பு தேர்தலில்!!

ராஜபக்ஷக்கள் தயாராகட்டும் என்று ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

"நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இப்போது வெளியாகியுள்ளது. ஆனால், எமது மக்களின் தீர்ப்பு தேர்தலில் வெளியாகும். அதை

02

## கல்வி அலுவலகத்தில் காவலாளியின் சடலம்

பருத்தித்துறையில் பரபரப்பு

வடமராட்சி, ஜூன் 3

பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலக காவலாளி, அந்த அலுவலகத்தில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டத்தைச்

12

## சகல மாவட்டங்களுக்கும் திங்களிலிருந்து பேருந்து

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு, கம்பஹா உட்பட சகல மாவட்டங்களுக்கு இடையேயும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இடம்பெறும் என்று பயணிகள் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறும். மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவைகள் கடந்த மே 26ஆம் திகதி அனுமதிக்கப்பட்டபோதும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை. இந்தநிலையில் சுகாதார அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து

02

## இணுவிலில் வாள்வெட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் இணுவிலில் நேற்றிரவு வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இணுவில் ஒரு சனசமூக நிலையத்தை அண்மித்த பகுதியில் இந்த வாள்வெட்டு இடம்

02

## நெல்லியடிச் சந்தை இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இழுத்து மூடப்பட்ட நெல்லியடி சந்தை இன்று புதன்கிழமை தொடக்கம் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தை நேற்று முன்தினம்

12

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி

# ஜனநாயகத்துக்கு வரலாற்று வெற்றி!

## எதிரணிக்குப் பெரும் அவமானம் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜூன் 3

"பொதுத்தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு நாட்டின் ஜனநாயகத்துக்கும் மக்களின் வாக்களிக்கும் உரிமைக்கும் கிடைத்த மாபெரும் வரலாற்று வெற்றி. இதனால் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்." என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"தேர்தலுக்குப் பயந்து கொண்டிருந்த எதிரணியினருக்கு இந்தத் தீர்ப்பு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் திகதி மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ள நிலையில், பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எதிரணியினர் தங்கள் உள்வீட்டுப்பிரச்சினைக்காகவும், தேர்தல் தோல்வியை எதிர்கொள்ளத் திராணியற்ற நிலையிலும் கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி தேர்தல் வேண்டாம் என்று வலியுறுத்தி உயர்நீதிமன்றம் சென்றனர். இந்நிலையில், அவர்களின் சுயலாப அரசியல் முயற்சியை உயர் நீதின்றத்தின் தீர்ப்பு தோல்வியடையைச் செய்துள்ளது.

நாம் எதிரணியில் இருந்த போதும் தேர்தலுக்குப் பயப்படவில்லை. தற்போது ஆளுந்தரப்புக்கு வந்தபோதும் தேர்தலுக்குப் பயப்படவில்லை. ஆனால், எதிரணியினர் ஆளுந்தரப்பில் இருந்த போதிலும் தேர்தலுக்கு அச்சமடைந்தனர். இப்போது எதிர்த்தரப்பில் இருக்கின்ற போதிலும் தேர்தலுக்கு அச்சமடைகின்றனர். இப்படியானவர்களின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை நாட்டு மக்கள் ஒருபோதும் வழங்க மாட்டார்கள்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் எம்மை வெற்றியடையச் செய்வார்கள்" - என்றார். (த-22)

### தேர்தலுக்கு...

நாடாளுமன்றத் தேர்தல் திகதி மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், மனுக்கள் மீது 10 நாள்கள் மேற்கொண்ட பரிசீலனைகளின் பின்னர் அவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் இந்த இறுதியான முடிவை நாம் மதித்தே ஆக வேண்டும். எனவே, இந்த முடிவை நாம் மதிக்கின்றோம். நாடாளுமன்றத் தேர்தல் எமக்குச் சவால் அல்ல. நாம் எந்தவேளையிலும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்" -என்றார். (த-22)

### பொதுத்...

அதிகமாக இருக்கின்றன. சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி இது தொடர்பில் இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் திகதி மற்றும் நாடாளுமன்றக் கலைப்பு ஆகியனவற்றைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்காமலேயே உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

நீதிமன்றத் தீர்ப்புக் கிடைத்து 70 நாள்களுக்குள் தேர்தல் நடத்தக் கூடியதாக இருக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், தேர்தல் திகதி தொடர்பில் ஆணைக்குழு இன்று கூடி ஆராயவுள்ளது.

"எவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாகத் தேர்தலை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வோம். சுகாதார அதிகாரிகளுடனும் கலந்துரையாடியே தேர்தல் திகதியைத் தீர்மானிப்போம்" என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார். (ஒ,5)

### நீதி...

முயற்சி படுதோல்வியடைந்துள்ளது. நான் அரசமைப்பை மதித்து நீதியின் வழியில் நடந்ததால் நியாயமான தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது."

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு, நாடாளுமன்றத் தேர்தல் திகதி (ஜூன் 20) வர்த்தமானி அறிவிப்பு ஆகியனவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சட்டப்படியே நாடாளுமன்றத்தைக் கலைத்தேன். இதை எவராலும் சவாலுக்குட்படுத்த முடியாது. இதை அறிந்தும் எதிரணியினர் உயர்நீதிமன்றத்தை நாடினார்கள். அடுக்கடுக்காக மனுக்களைத் தாக்கல் செய்தார்கள். தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்த தேர்தல் திகதியையும் எதிர்த்தார்கள். ஆனால், உயர் நீதிமன்றம் மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து நியாயமான தீர்ப்பை வழங்கியுள்ளது. இதனை நான் வரவேற்கின்றேன்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே தேர்தல் நடக்கும். அதற்கமைய தேர்தல் திகதி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம் எடுக்கும்"- என்றார். (த-22)

### நீதிமன்றின்...

எதிர்கொள்ள ராஜபக்ஷக்கள் தயாராக வேண்டும்." என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் திகதி மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ள நிலையில், அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிரான மனுக்களை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் நாம் ஏமாற்றம் அடையவில்லை. அதை நாம் ஏற்கின்றோம்; மதிக்கின்றோம். ஆனால், எமது மக்கள் தங்கள் தீர்ப்பை தேர்தலில் இந்த அரசுக்கு வழங்குவார்கள். இது உறுதி. எனவே, தேர்தல் தோல்வியை எதிர்கொள்ள ராஜபக்ஷக்கள் தயாராக வேண்டும்.

எதிரணியினர் பலம் இழந்துவிட்டார்கள் என்று ராஜ பக்ஷ அரசு கனவு காண்கின்றது. ஆனால், தேர்தலில் எதிரணியினரின் பலத்தை இந்த அரசு கண்டு வியக்கும். வாக்கு மோசடியற்ற நீதியான தேர்தல் நடந்தால் இந்த அரசு தோற்பது உறுதி"- என்றார். (த-22)

### இணுவிலில்...

பெற்றுள்ளது. வீட்டு வாசலில் நின்றவர் மீதே வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்றும் சுமார் 4 மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களே வெட்டிவிட்டுச் சென்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

### சகல...

வரும் திங்கட்கிழமை முதல் அனைத்து மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து அனுமதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. தற்போதுள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றி பொதுப் போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார். (ஒ,5)

### 8 மனுக்களும்...

அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்காமலேயே தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது உயர் நீதிமன்றம்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் வர்த்தமானி அறிவிப்பு ஆகியனவற்றை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் 8 அடிப்படை உரிமை மனுக்களும், 13 இடையீட்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் கடந்த 18ஆம் திகதி முதல் பரிசீலனைகள் இடம்பெற்றன. மனுதாரர்களின் வாதங்கள், பிரதிவாதிகளின் வாதங்கள், இடைபுகு மனுதாரர்களின் வாதங்கள் என்பன கடந்த 10 நாள்களாக இடம்பெற்று வந்தன. இவை நேற்றுத் திங்கட்கிழமை முடிவடைந்த நிலையில் தமது தீர்மானத்தை இன்று அறிவிப்பதாக உயர் நீதிமன்றம் கூறியிருந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை 3.15 மணியளவில் உயர் நீதிமன்றம் கூடியது. 5 நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் தீர்ப்பை பிரதம நீதியரசர் ஒரு நிமிடத்தில் தெரிவித்தார். இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்வதாக அவர் அறிவித்தார். (ஒ,5,22)

### அறுவைச்...

கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இடமாற்றம் பெற்றுச்செல்லும் நிபுணர் முகுந்தனின் இடத்துக்கு தென்பகுதியைச் சேர்ந்த மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னரே, முகுந்தன் விடுவிக்கப்படுவார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நிபுணர் முகுந்தன், ஒருவரின் நுரையீரலுக்குள் புகுந்திருந்த 'ஷெல் பீஸ்' ஒன்றை மிக நுணுக்கமான முறையில் அறுவைச் சிகிச்சை மூலமாக அகற்றியிருந்தார். உயிராபத்தான இந்த அறுவைச் சிகிச்சையை அவர் மிகவும் வெற்றிகரமாக செய்திருந்தார். இதுபோன்ற பல சத்திரசிகிச்சைகளை முகுந்தன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் வெற்றிகரமாகச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,9)

### விதிகளை...

குழுவில் முறையிட்டுள்ளார்.

"யாழ்ப்பாண மாநகர சபையின் சட்ட ஆலோசகராக சட்டத்தரணி செலஸ்ரின் செயற்படுகின்றார். அந்தவகையில் அவர் மாநகர சபையின் ஒப்பந்தப் பணியாளர்களில் ஒருவராவார். அதாவது ஒரு அரச திணைக்களமொன்றில் உதவுதொகையைப் பெறுபவரான சட்டத்தரணி ஸ்ரெனிஸ்லஸ் செலஸ்ரின் என்பவர், குறித்த உதவுதொகையினை வழங்கும் மாநகர சபையில் உரிய விடுமுறையைப் பெற்றுக்கொள்ளாமல் தேர்தலில் போட்டியிடுகின்றார். இது அப்பட்டமான ஒரு தேர்தல் விதிமுறை மீறலாகும். "என்று தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரியவருகின்றது. (அ,105)

### மயங்கி...

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த ஞானலிங்கம் பிரதீபன் (வயது -23) என்பவரே உயிரிழந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

மேசன் வேலைக்கு சென்று வேலை முடிந்து சைக்கிளில் வீடுநோக்கி சென்றுகொண்டிருந்தபோது மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-159)

### கொரோனா...

எண்ணிக்கை ஆயிரத்து 656 ஆக அதிகரித்துள்ளது. நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 03 கடற்படையினரும், கடற்படையைச் சேர்ந்த தொற்றாளருடன் தொடர்புடைய ஒருவரும், டுபாயிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்ட ஒருவரும், ரஷ்யாவிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்ட ஒருவரும் அடங்குகின்றனர்.

இதேவேளை, தொற்றிலிருந்து மேலும் 12 பேர் குணமடைந்துள்ளனர். இதன்படி தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 823 ஆக உயர்வடைந்துள்ளது. தொற்றுக்குள்ளானவர்களில் தற்போது 815 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் 84 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (த-22)

பருத்தித்துறையில்
## 5 மீன் வியாபாரிகள் தனிமைப்படுத்தலில்

தென்மராட்சி, ஜூன் 3
பருத்தித்துறை பொதுச் சந்தையில் சமூக இடைவெளியைப் பின்பற்றாது, கொரோனா பரவல் விதிகளை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட கடலுணவு விற்பனையாளர்கள் ஐந்து பேர் சுகாதாரப் பகுதியினரால் 14 தினங்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.
சமூக இடைவெளியைப்பேணாது இருந்தனர், தடை செய்யப்பட்ட பருத்தித்துறை மீன்சந்தைப் பகுதியில் அத்துமீறி நுழைந்து மக்களை ஒன்றுகூட்ட காரணமாயிருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (ம-9)

# அரசுடன் 'டீலும்' இல்லை தேசிய அரசும் இல்லை!

### ஐ.தே.க. ஆட்சி மலரும் என்கிறார் அகிலவிராஜ்

கொழும்பு, ஜூன் 3
எங்களுக்கு அரசுடன் டீல் கிடையாது. தேசிய அரசு அமைக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்க மாட்டோம். மீண்டெழும் சக்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கின்றது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் உள்ளவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவார்கள் என்று கருத்து வெளியிட்ட அவர், எப்படி, எப்போது போன்ற விவரங்கள் எல்லாம் தற்போது இரகசியமாகவே உள்ளன என்றும் கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு எதிராக செயற்பட்டதாலேயே சஜித் பிரேமதாச தலைமையிலான குழுவினரின் உறுப்புரிமையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாம் எல்லாவித தியாகங்களையும் செய்தோம். ஆனால், புதிய கட்சியை உருவாக்கி, எல்லாவற்றையும் குழப்பிவிட்டனர். கட்சிக்குள் பேசவேண்டிய விடயங்களைவெளியில்விமர்சிப்பதாலேயே 1994 இல் இருந்து இற்றைவரை ஐக்கிய தேசியக்கட்சிக்கு அரச தலைவர் ஒருவரை பெறமுடியாமல் உள்ளது. 94 இல் அனுதாப வாக்குகளாலேயே சந்திரிகா வெற்றிபெற்றார். 2005 இல் ரணிலின் வெற்றியை புலிகள் தடுத்தனர். எனவே, தலைவர் ரணில் விமர்சிப்பதில் அர்த்தம் இல்லை. அவரே இந்தநாட்டில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினார்.
தற்போதைய அரசுடன் எமக்கு 'டீல்' இல்லை. எங்களை விமர்சிப்பவர்களே டீல் வைத்துள்ளனர். தேசிய அரசு அமைப்பதற்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று செயற்குழு கூட்டத்தில் ரணில் குறிப்பிட்டார். ஆகவே, எமக்கு எதிரான போலி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.
அதேவேளை, 1960, 1970 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியடைந்தது. 8 ஆசனங்கள் என்ற நிலைகூட உருவானது. ஆனால்,அதன்பின்னர்77இல்ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் மீண்டெழுந்தோம். அதேபோல் இந்த தேர்தலின் பின்னரும் ஐக்கிய தேசியக்கட்சிஎழுச்சிபெறும்என்பது உறுதி. வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கிலேயே தேர்தலில் போட்டியிடுகின்றோம். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியொன்றை அமைப்போம் -என்றார். (ஒ,5,44)

## பாண் விலையை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜூன் 3
பாண் உள்ளிட்ட வெதுப்பக உணவுகளின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பேக்கரிச் சங்கம் தெரிவித்துள்ளது. மாஜரின், பாம் எண்ணெய், முட்டை ஆகியனவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையாலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், யாழ்ப்பாணத்தில் பேக்கரி உணவுகளின் விலைகளில் மாற்றம் ஏற்படாது என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.
நாட்டின் அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்து ஏனைய பொருள்கள்அனைத்தினதும் இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், வெதுப்பகங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை பேக்கரிச் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.
இறக்குமதிப் பொருள்களுக்கு வரிச் சலுகை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளோம். எமக்குச் சலுகைகள் வழங்கப்படாவிட்டால் பாண் உட்பட அனைத்து பேக்கரி உணவுகளின் விலைகளையும் அதிகரிக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

கொரோனா பாதுகாப்புடன்
## தேர்தலை கண்காணிக்க 7 அமைப்புக்கள் ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3
நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்குத் திட்டமிடும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கொரோனா பாதுகாப்பு செயன்முறையுடன் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் கண்டுள்ளன.
கொரோனா பாதுகாப்புத் தொடர்பான 8 விடயங்களை அவை கவனத்தில் எடுத்துச் செயற்படுத்துவதற்கு இணங்கியுள்ளன.
சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், இலங்கையின் அன்னையரும் புதல்வியரும், சுதந்திரமானதும் நீதியுமான தேர்தல்களுக்கான இயக்கம், தேசிய தேர்தல்களுக்கான கண்காணிப்பு நிலையம், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கானமக்கள் செயற்பாடு ஆகிய 7 அமைப்புக்களுமே இந்த இணக்கத்தை வெளியிட்டுள்ளன. (ஒ,5)

## வாக்குச்சீட்டு அச்சிடல் ஆரம்பம்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.
ஒரு கோடியே 17 இலட்சம் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த-22)

## காயப்பட்டவர் சாவடைந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 3
மோட்டார்சைக்கிள் மோதியதில் காயமடைந்திருந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த இராசையா அருள்நாதன் (வயது - 63) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த 18ஆம் திகதி கோண்டாவில் கிழக்கில் வீதியோரம் நின்றிருந்தவரை பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகப் பயணித்த மோட்டார்சைக்கிள் மோதி சுமார் 7 மீற்றர் தூரத்துக்கு தூக்கி வீசியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
அவர் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கடந்த 26ஆம் திகதி வீடு சென்றிருந்தார். எனினும், உடல்நிலையில் ஆரோக்கியமான நிலைமை காணப்படாததனால் கடந்த முதலாம் திகதி மீளவும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். விசாரணையின்பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
அந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சாரதி, சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிராதவர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

தேயிலை மலையில்
## குளவி கொட்டி பெண் சாவு

லிந்துலையில் நேற்று குளவிக்கொட்டுக்கு இலக்காகி பெண் தோட்டத் தொழிலாளி உயிரிழந்துள்ளார். மேலும் 7 பேர் சிகிச்சைக்காக லிந்துலை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
லிந்துலை சென்கூம்ஸ் மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான அலீமா பீபீ (வயது - 59) என்பவரே உயிரிழந்துள்ளார்.
தேயிலை மலையில் வேலைசெய்து கொண்டிருந்தபோது குளவிகள் கலைந்து தாக்கியுள்ளன. அந்த பெண் தொழிலாளி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## நல்ல தீர்ப்பு

### ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய கட்டளை நல்லதொரு தீர்ப்பு என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார்.
தேர்தல் திகதி மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.
'உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளை நல்லதொரு தீர்ப்பு. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானது. எங்களை அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று எந்த அறிவுறுத்தலையும் வழங்க வில்லை. எங்களைச் சுயாதீனமான இயங்கும் வகையில் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது' என்றார் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல். (ஒ,5)

### 43 லட்சம் ரூபா பெறுமதிமிக்க

# நிவாரணம் வழங்கிய யாழ். மருத்துவபீடம்

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**கொரோனா அச்சுறுத்தலையடுத்து தொடர் ஊரடங்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 43 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினால் வழங்கப்பட்டுள்ளது. சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.**

இது தொடர்பில் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஊரடங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கும் செயற்றிட்டமானது மார்ச் மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முதல் கட்டமாக 65 ஆயிரம் ரூபாவுக்கு பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு 150 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

முன்னாள் மருத்துவபீட மாணவர்களின் உதவியுடனும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் பங்களிப்புடனும் 20 இலட்சம் ரூபா மதிப்புள்ள உலர் உணவுப்பொதிகள் 3 ஆயிரத்து 400 வரையான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பல்வேறு பகுதிகளிலும் அந்தப் பிரதேசத்துக்குரிய மாணவர் அமைப்பின் ஊடாக எமது மாணவர்கள் உதவி தேவைப்படுகின்ற மக்களுக்கு உதவிகளை வழங்கினர்.

யாழ்ப்பாண மருத்துவ மாணவர் அமைப்பான தளிர் அமைப்பினூடாக 7 லட்சம் ரூபா மதிப்புள்ள பொதிகள் 750 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மருத்துவ மாணவர் அமைப்பால் 3 லட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு 350 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் எமது மாணவர்களைக் கொண்டு இயங்கும் கல்வி ஊக்குவிக்கும் அமைப்பு 10 இலட்சம் ரூபா மதிப்புள்ள உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தது. மேலும் திருகோணமலை மாணவர் அமைப்பு ஊடாக 2 லட்சத்து 61 ஆயிரத்து 950 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் 325 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

எமது பீடத்தின் தன்னார்வ மாணவர்கள் யாழ். போதனா மருத்துவமனையின் சேவைகளில் குறிப்பிடத்தக்க உதவிகளைச் செய்து வருகிறார்கள். தொற்றா நோய்களுக்காக இயங்கும் மருந்து விநியோக சேவையிலும், தொற்று நோய் பரவலை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்துவதிலும், கொரோனா சந்தேகத்துக்குரிய நோயாளர்களுக்கான தொலைக்காட்சி ஊடானதொடர்சேவையை முன்னெடுப்பதிலும் பங்களிப்பை வழங்கினார்கள். தொற்றா நோய்களுக்காக இயங்கும் மருந்து விநியோகிக்கும் செயற்றிட்டமானது இதுவரையான செயற்றிட்டங்களில் முதன்மையானதாகும். இந்தச் செயற்திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து நாட்டின் மற்றைய பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளும் இந்தச் சேவையை முன்னெடுத்துள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டி மற்றும் அநுராதபுரம் மருத்துவமனைகளிலும் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் புத்தளத்தை வதிவிடமாகக் கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் கொவிட்



19 இற்கான ஜனாதிபதி பணிக்குழுவில் தன்னார்வமாக செயற்பட்டு வருகின்றனர். மேலும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள எமது மாணவர்கள் கொவிட் 19 தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கொவிட் 19 தொடர்பான வழிகாட்டி உரைகள் மற்றும் ஆவணங்களை மொழிபெயர்ப்பதிலும் எம் மாணவர்கள் தமது பங்களிப்பை வழங்குகிறார்கள். பல்வேறுபட்ட அமைப்புகளின் கொவிட் 19 பற்றிய ஆவணங்கள் மற்றும் விழிப்புணர்வு பதிவுகளை மொழிபெயர்த்துள்ளனர். யாழ். மருத்துவபீடத்தின் ஒளிப்படக்கழகத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட விழிப்புணர்வு சுவரொட்டிகளை நேரடியாகவும் சமூக வலைத்தளங்களினூடாகவும் வழங்கி மக்களின் விழிப்புணர்வை அதிகரித்துள்ளனர். மேலும் 'கொரோனாவை வெல்வோம்' எனும் தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் சுகாதார கல்வி பிரிவுடன் இணைந்து கிளிநொச்சி மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் விழிப்புணர்வு பாடலும் வெளியிடப்பட்டது.

#### மருத்துவ பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த இந்த முயற்சி தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி சு.ரவிராஜ் தெரிவித்ததாவது:

மருத்துவபீட மாணவர்களால் பலதரப்பட்ட சேவைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய செயற்பாடுகள் மாணவர்களின் தலைமைத்துவ பண்பையும் நற்பண்பையும் வளர்க்கின்றன. மாணவர்களுக்கு மருத்துவபீட விரிவுரையாளர்கள் குழாம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, தொண்டார்வ நிறுவனங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலதரப்பட்ட வழிகளில் உறுதுணையாக இருந்துள்ளனர்.

எமது மாணவர்களின் கொவிட் 19 தொடர்பான விழிப்புணர்வு எமது நாட்டின் மக்களை இந்தத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது. மருத்துவராக உருவாக இருக்கும் மாணவர்களுக்கு இவ்வாறான சமூகப் பொறுப்புகள் இன்றியமை தொன்றாகும்.

மாணவர்களின் இத்தகைய சேவையை ஆதரித்ததுடன் அதற்குரிய வழிகாட்டல்களையும் வழங்கிய நிர்வாகத்துக்கும், கல்விசார் ஊழியர் குழாமுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்- என்றார். (ஒ,5)

## குருநாகலில் பரவுகின்றது வெட்டுக்கிளிகள் தாக்கம்

குருநாகல், ஜூன் 3

குருநாகல், மாவத்தகமவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட ஒருவகை வெட்டுக்கிளிகள் தற்போது அந்தப் பகுதியில் உள்ள மேலும் சில கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பரவியுள்ளன என்று விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவத்தகம, பிரான்சிஸ்கா பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த வெட்டுக்கிளிகள் முதன்முறையாக இனங்காணப்பட்டன. அவை தொடர்பில் ஆராய்வதற்காக விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினர் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்றிருந்தனர்.

மரவள்ளி, தென்னை மரம், சோளம், வாழை போன்ற பயிர்களை இந்த வெட்டுகிளிகள் தாக்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. எனினும் அந்த வெட்டுக்கிளிகள் தொடர்பான மேலதிக விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று குருநாகல் மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-ரி1)

## தனியார் ஊழியர்களால் 15,000 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 3

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த 2 மாதங்களில் தனியார்துறையில் பணியாற்றுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக 15 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான பூரண அறிக்கை தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தொழில் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பணியாளர்களை பணியிலிருந்து நிறுத்தியமை, மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமை, மாதாந்த கொடுப்பனவில் ஒரு பகுதி மட்டும் வழங்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்களின் தலைவர்களை வரவழைத்து, நேரடியாகக் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் பின்னர் முறைப்பாடுகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## திண்மக் கழிவிலிருந்து எரிபொருள் தயாரிப்பு

### மட்டக்களப்பில் புதிய திட்டம்



மட்டக்களப்பு,ஜூன் 3

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சி செய்வதன் மூலம் மின்சக்தி மற்றும் எரிபொருள்களான பெற்றோல், டீசல் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.

கனடா அரசால் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம் இந்தியா ஊடாக கொழும்பு மாநகர சபையின் அனுசரணையுடன் மட்டக்களப்பில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட வரைவு முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முதலாக அமுல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டமானது மட்டக்களப்பில் பரீட்சார்த்த திட்டமாக நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவான் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், திட்டம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (க-150)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மனமிருந்தால் தானே மார்க்கம் இருக்கும்!

கொரோனா அச்சத்தால் எடுத்த எடுப்பிலேயே இழுத்து மூடப்பட்ட கல்விக் கூடங்கள் இன்னமும் திறக்கப்படாமல் பூட்டிய படியே இருக்கின்றன. பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்காக பல தடவைகள் உயர் அதிகாரிகள் கூடிக் கதைத்த போதும் உருப்படியான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இறுதியாகக் கலந்துரையாடிய போது, நிதிப்பற்றாக்குறையே பாடசாலைகளைத் திறப்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ள காரணி என்று சொல்லப்பட்டுள்ளது.

மீளவும் பாடசாலைகளைத் திறப்பதானால் தனியாள் இடைவெளி பேணக்கூடிய வகையில் வகுப்பறைகளை ஒழுங்கமைத்தல், முகக்கவசம் அணிதல், கைகளை உரிய கிருமி நீக்கும் திரவங்கள்மூலம் கழுவுதல் போன்றவற்றை கொரோனா அச்சம் முற்றாக அகலும் வரை தொடரவேண்டும். அதற்காக சகல பாடசாலைகளுக்கும் அரசே நிதியை அனுப்ப வேண்டியுள்ளது. ஆனால் கைகளைக் கழுவும் பொறியமைப்பை நிறுவவும், கிருமி நீக்கும் கைகழுவும் திரவம் வாங்கவும் சுமார் 400 மில்லியனுக்கும் அதிகமாகத் தேவைப்படலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ள போதும், அரசினால் வெறும் 100 மில்லியனையே ஒதுக்க முடியுமெனக் கூறப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு பாடசாலையும் உள்ளூர்க் கொடையாளர்களிடமிருந்தோ, பெற்றோரிடமிருந்தோ மேலதிக நிதியைப் பெற்று , சுகாதார வசதிகளைத் தத்தம் பாடசாலைகளில் ஏற்படுத்துவது குறித்து தற்போது தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றதாம். இப்படி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கிடையில் இந்த வருடம் முடிந்து அடுத்த கல்வியாண்டும் ஆரம்பித்து விடக்கூடும்.

கல்விக்கூடங்களைத் திறக்க காசில்லை என்று கஞ்சத்தனம் காட்டும் இதே அரசுதான், வழக்கமாகத் தேர்தலுக்குச் செலவாகும் தொகையை விட இரட்டிப்புச் செலவு ஏற்படும் என்று தெரிந்தும் உடனே தேர்தலை வைத்தே ஆகவேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது. பொதுத்தேர்தலுக்கான வர்த்தமானிக்கு எதிரான மனுக்கள் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டவுனேயே தேர்தலுக்கு நாள் குறிக்கச் சொல்லிக் கட்டளை பறந்துவிட்டது. இதனால் என்ன செலவானாலும் தேர்தல் நடத்தப்படவே போகின்றது. தேர்தலுக்குச் செலவிட போதிய நிதி இருக்கும் அரசாங்கத்திடம் பாடசாலைகளைத் திறக்கத்தான் நிதியில்லைப் போலும்.

இலட்சக்கணக்கான மாணவர்களின் கல்வியை விடவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமே அரசுக்கு பெரியவிடயமாகப்படுகின்றது. கொழும்பில் 980 மில்லியன் ரூபாவுக்கு கடற்கரையை மூடி மணல் போட்டு , அதனைத் தண்ணீரில் கரையவிட்டு வீணாக்கும் வேலைகளுக்கு செலவிட மனமிருக்கிறது. ஹோமகமவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட மைதான நிர்மாணிப்பை , கடன் வாங்கியாவது கட்டி முடிப்பேன் என ஒற்றைக்காலில் நின்று சவால் விடவும் அமைச்சர்களுக்கு 'கெத்து' இருக்கிறது. ஆனால் மாணவர்களின் சுகாதார நலன் பேண நிதியைக் கொடுக்க மட்டும் அவர்களின் கஜானா வற்றிப்போயிருக்கிறது.

குடிப்பதற்கு கூழ் கூட இல்லையென்றாலும் பன்னீரில் கொப்பளித்தே ஆகவேண்டும் என்று அடம்பிடிக்கும் ஆட்சியில் வாழக் கிடைத்த மக்கள் பாக்கியவான்களே!

# இலங்கை, சீனா உள்விவகாரத்தில் யாரும் தலையிட அனுமதியில்லை

## சீனா கூறுகின்றது

**கொழும்பு, ஜுன் 3**

**இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரம் ஆகிய விடயங்களில் இலங்கையும் சீனாவும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று ஆதரவாகச் செயற்படும் அதேவேளை, இரு நாடுகளினதும் உள்ளக விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீட்டை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.**

வெளிவிவகார அமைச்சரின் கருத்தொன்றை மேற்கோள் காண்பித்து, அதற்கு ஆதரவாகச் சீனத்தூதரகம் வெளியிட்டிருக்கும் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் இறையாண்மையை உறுதிசெய்வதில் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதோடு, இலங்கை ஹொங்கொங்குடன் வழமையான தொடர்புகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார். அதனை மேற்கோள் காண்பித்து இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிடப்பட்டுள்ளது.

சீனாவின் கொள்கைக்கு எப்போதும் உறுதியான ஆதரவை வழங்கும் வகையிலான இலங்கையின் நிலைப்பாட்டை வரவேற்கின்றோம். சீனாவும், இலங்கையும் மூலோபாய அடிப்படையில் நெருங்கிய பங்காளர்களாக உள்ளன. எமது உள்ளக விவகாரங்களில் எந்தவொரு வெளிநாடுகளின் தலையீட்டையும் அனுமதிக்க முடியாது - என்றுள்ளது. (ப)




# வவு. அன்னையர் கழகத்துக்கு விதை தானியம் கையளிப்பு

வவுனியா, ஜுன் 3

உணவுப் பாதுகாப்பு செயற்றிட்டத்தில் வவுனியா தம்பனைச்சோலை அன்னையர் கழகத்துக்கு விதை தானியங்கள் வழங்கப்பட்டன. வன்னிமண் நற்பணி மன்றத்தின் நிதி அனுசரணையில் 50 குடும்பங்களுக்கு இந்த விதை தானியங்கள் வழங்கப்பட்டன. குடும்பநல அலுவலர் திருமதி நந்தகுமார் சுதர்சினி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மகளிர் கழக அங்கத்தவர்கள், மாதர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், அன்னையர் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)

# சிப்பாய்கள் இருவர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன் 3

வாகன விபத்து ஒன்றில் சிக்கி இராணுவச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பகமூண -தம்புள்ளை வீதியில், தமனயாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளொன்றும், தனியார் பஸ் வண்டியொன்றும் நேருக்குநேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்த நிலையில், பகமூண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். அவர்கள் லுணுகல மற்றும் கல்தொட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 27 மற்றும் 28 வயதுகளையுடையவர்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் குறித்த பஸ் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பகமூண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# அரச ஆட்சி முறையையே முன்னெடுக்கிறார் கோத்தா

## நளின் பண்டார தெரிவிப்பு

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு தற்போது உரிய நேரத்தில் தேர்தலும் நடத்தப்படாத நிலையில் அவர் அன்றிலிருந்து அரச ஆட்சி முறையையே முன்னெடுத்து வருகின்றார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் இன்னும் முடிவுறாத நிலையில் , ஜனாதிபதி அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி இடைக்காலத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளதுடன் , உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படாத நிலையில், நாட்டின் நாடாளுமன்றம் இயங்காத நிலையில், தற்போது அரச ஆட்சிமுறையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் வழங்கப்படும் 5ஆயிரம் ரூபாவைக் கொண்டு குடும்பமொன்று வாழமுடியுமா? இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இராணுவத்தினர் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வீரர்களாகச் சித்திரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பணியாளர்கள் இன்று தற்கொலைக் குண்டுதாரிகளாகச் சித்திரிக்கப்படுகின்றனர். இதேவேளை கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் பெரும் சேவையாற்றி வருகின்ற சுகாதாரப் பிரிவினரும் இன்று வீதியில் தள்ளப்பட்டுள்ளனர். இதுவே தற்போதைய அரசாங்கத்தின் நிலைமை -என்றார். (ப)

# குளக்காணிகளை அபகரித்து அமைத்த வேலிகள் அகற்றம்

## வவுனியாவில் நடவடிக்கை

**வவுனியா,ஜூன் 3**

**வவுனியாவில் குளக் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட நிரந்தர வேலிகளை அகற்றும் நடவடிக்கையில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் ஈடுபட்டுள்ளது.**



நேற்றுக் காலை தொடக்கம் 4 குளங்களின் நிலப்பகுதிகளை ஆக்கிரமித்து நிரந்தர மற்றும் தற்காலிக வேலிகளை அமைந்தவர்களுடைய வேலிகளை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

குளங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு பட்டக்காட்டு குளம், வேப்பங்குளம், கோவில்குளம், ஓயார் சின்னக்குளம் ஆகிய குளங்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட வேலிகளை அகற்றி, காணிகள் மீட்கப்பட்டன. குளத்து காணிகளை அபகரித்து நிரந்தரக் கட்டடங்கள் அமைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"வவுனியாவில் எமது திணைக்களத்தின் கீழ் உள்ள 76 குளங்களின் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில் வவுனியா பண்டாரிக்குளத்தின் பகுதிகளை ஆக்கிரமித்து கட்டடங்கள் அமைத்த 36 பேருக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். குளக்காணிகளைப் பிடித்து வேலிகள் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்தால், அதனை அகற்றுவதற்கான சட்ட அதிகாரம் எமக்கு இருக்கிறது. வீடுகளை அமைத்துள்ளவர்கள் மீது நீதிமன்றினூடாக வழக்குத் தாக்கல் செய்யப்படும். குறித்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்" என்று கமநல உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார்.

(க-110,18)



# ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலை புதிய கட்டடத்துக்கு அடிக்கல்!

கிளிநொச்சி, ஜூன் 3

நிறைந்த கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமூடாக கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அ.த.க பாடசாலைக்கு வகுப்பறை கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையானது அன்று அமைக்கப்பட்ட கட்டடங்கள் ஊடாகவே இன்றுவரை இயங்கி வருகின்றது. நிறைந்த கிராமம் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக 2 மில்லியன் ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டடம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் வலயக் கல்வி பணிமனையின் திட்டமிடற் பணிப்பாளர், கரைச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சமத்துவக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ம-222)

# குவைத்திலிருந்து வந்தோரில் மேலும் சிலருக்குத் தொற்று!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 3

குவைத்திலிருந்து நாட்டுக்கு வந்தவர்களில் மேலும் சிலர் எதிர்வரும் நாள்களில் நோய் தொற்றுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளிலிருந்து நோயாளர்களாக இலங்கையர்கள் வருகின்றமையே நாம் தற்போது முகங்கொடுத்துள்ள பிரதான பிரச்சினை. இது வரையில் (மே 31 ஆம் திகதி வரை) 522 பேர் வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் நாட்டுக்கு வந்துள்ளனர். குவைத்திலிருந்து வந்த 466 நபர்களில் 330 பேர் வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் நாட்டை வந்தடைந்தவர்களாவர். இதே போன்று கட்டாரிலிருந்து வந்த 270 பேரில் 150 பேர் வைரஸ் தொற்றுக்கு உள்ளானோராவர். குவைத்திலிருந்து வந்த 466 பேரும் முதல் கட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் 10 நாள்களுக்கு பின்னர் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர்களில் சிலர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்ற முடிவு கிடைத்தாலும் அவர்களில் சிலர் எதிர்வரும் நாள்களில் நோய்த் தொற்றுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அதே போன்று கட்டாரிலிருந்து வந்த 270 பேரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 150 பேர் இது வரையில் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது வரை 800க்கும் அதிகமானோர் தொற்றிலிருந்து முழுமையாக குணமடைந்துள்ளனர். எவ்வாறாயினும் மக்கள் மத்தியில் வைரஸ் தொற்று பரவாமலிருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். வரலாற்றில் குறுகிய காலத்தில் அதிக நிதி செலவிடப்பட்டது அண்மைய காலமேயாகும்-என்றார்.

(ப)



யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (க-23)

# உணவக காணியை விடுவிக்க உத்தரவு

வவுனியா,ஜூன் 3

வவுனியா கனகராயன்குளம் ஏ9 பிரதான வீதியில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய உணவகம் அமைந்துள்ள காணியை விடுவிக்குமாறு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் அறிவுறுத்தல் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரச காணியில் அதிகாரமில்லாமல் ஆட்சி செய்தல் அல்லது குடியிருக்கிறீர் எனக்கருதுவதால் 1979 ஆண்டின் அரச காணிகள் ஆட்சி மீளப்பெறுதல் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் 7 மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் காணியை விட்டு வெளியேறுமாறும். காணியை பிரதேச செயலரிடமோ, அல்லது குடியேற்ற உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தரிடமோ ஒப்படைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-110)

# குவைத்திலிருந்து வந்தோருக்கே அதிகமாக கொரோனாத் தொற்று

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

குருதிப் பரிசோதனை செய்யப்பட்டு கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டு, இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட குவைத் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத் தொற்று அதிகம் இனங்காணப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா நகரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை மிகவும் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. குவைத் நாட்டிலிருந்து வந்த இலங்கையர்களே அதிகளவில் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களை நாட்டுக்கு அனுப்பும் போது குருதிப் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் அதில் கொரோனா வைரஸ் தொற்று அடையாளப்படுத்தப்படவில்லை என்றும் குவைத் அரசு குறிப்பிட்டது. ஆனால் இவர்கள் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள்.

இலங்கைக்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். இதில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது-என்றார்.

(ப)

# இந்தியாவிலிருந்து மன்னார் வந்த தந்தை, மகள் கைது!

மன்னார், ஜூன் 3

இந்தியா தூத்துக்குடி கடல் வழியாக மன்னாருக்குத் தப்பி வந்த தந்தையும் மகளும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்தவரின் தந்தையார் மாந்தை பரப்புக் கடந்தான் ஊடாக சொந்த இடமான மடு சின்ன பண்டிவிரிச்சானுக்கு அவர்களை அழைத்துச் சென்றுள்ளார்.

அழைத்துச் சென்ற நபர் அவரது வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளார். படகு மூலம் வருகை தந்த தந்தை, மகள் இருவரையும் மடுப் பொலிஸார் கைது செய்தனர்.

விசாரணைகள் முடிந்தவுடன் இருவரும் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கொரோனாத் தொற்று ஏற்பட்டதிலிருந்து இலங்கை சுகாதார திணைக்களத்தின் பணிப்புரையைக் கடைப்பிடித்து அனைவரும் தியாக மனப்பான்மையுடன் செயற்பட்டமையால், இங்கு கொரோனா கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

இந்தியாவில் அதன் தாக்கம் குறைந்ததாகத் தகவல்கள் இல்லை. அதிலும் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் மக்கள் நெருக்கடி அதிகமாக காணப்படுகிறது. எனவே இந்தியாவில் இருந்து அனுமதியின்றி இலங்கை வந்துள்ள இவர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வது, அங்கும் இங்கும் உலாவவிடுவது பொருத்தமற்றதாக இருக்கும். எனவே அவர்களுக்கான விசாரணைகள் முடிந்தவுடன் நேரடியாக தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்புவது சிறந்தது.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்ப நினைப்போர், சட்ட விரோதமாக வருவதை நிறுத்தி உரிய அனுமதிகளுடன் விமானங்கள் மூலம் இலங்கை வருவது நமது நாட்டுக்கும், மக்களுக்கும் மிகவும் நல்லது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்கள் உங்கள் சொந்தங்கள் எவரேனும் இவ்வாறு இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்தால் உடனடியாக சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, உரிய தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார சுகாதார நடவடிக்கைகளைப் பெற்றுக் கொண்டு கொரோனா வைரஸ் நாட்டில் பரவாமல் தடுப்பதற்கு உதவி புரிய வேண்டும்- என்றார்.

(க-213)

# வடக்கில் பரவலாக டெங்குச் சோதனை

**தென்மராட்சி, ஜூன் 3**

**வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறப்பு டெங்கு களப் பரிசோதனைகள் எதிர்வரும் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.**



உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா தொற்றால் எமது நாட்டில் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் டெங்கால் இந்த வருடத்தில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் டெங்குவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தேசிய ரீதியில் பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'தற்போது நிலவும் வெப்பம் காரணமாக டெங்குவின் தாக்கம் குறைவடைந்துள்ள போதிலும் அண்மையில் பெய்த மழையின் பின்னர் டெங்குவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு மாகாணத்தில் டெங்குவின் தாக்கம் ஏற்படாமல் தடுக்க தமது வீடுகள் மற்றும் காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய குளிர்சாதனப் பெட்டி, கூரைகளின் பீலிகள், குசினி, நீர் பாவிக்கும் இடங்கள், மலசலகூடங்களின் வெடிப்புகள் போன்றவற்றை துப்புரவு செய்வதுடன் பாவனையற்ற நீர் ஏந்து பொருள்கள் காணப்படின் அவற்றினை அப்புறப்படுத்தவும் நட வடிக்கை எடுக்க வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

# சின்னக்கடை சந்தை மீண்டும் வழமைக்கு

குருநகர், ஜூன் 3

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தை மீண்டும் வழமையான செயற்பாட்டுக்குத் திறக்கப்பட் டுள்ளது.

கடலுணவு விற்பனைப்பகுதி, மரக்கறி, பழவகைகள், வெற்றிலை, தேங்காய் விற்பனைப்பகுதி யாவும் இயங்க ஆரம்பித்துள்ளன. வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளைப் பேணும் முகமாக போதிய இடைவெளியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சந்தையில் உள்நுழையும் நுழைவாயில் வெளிப்புறங்களில் கைகழுவ வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

உள்நுழையும் பொதுமக்கள் இவற்றைக் கடைப்பிடிக்கிறார்களா என்பதை அவதானிக்க சுகாதாரப் பகுதியினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் சந்தையின் வெளிப்புறங்களில் சுகாதாரப் பகுதியினரால் ஒட்டப்பட்டுள்ளன.

சந்தைக்குள் நுழைபவர்கள் அவசியம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும். கைகழுவுதல் அவசியம். இவற்றைக் கடைப்பிடிக்காவிட்டால் சந்தையை மூட வேண்டிய நிலை உருவாகலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-51)



## சத்ய சாயி சேவா நிலையத்தில் தொற்று நீக்கல் நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் வெளிச்சம் அறக்கட்டளையின் மனிதநேய தொண்டர்கள் மூலம் தொற்று நீக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம், வெளிச்சம் அறக்கட்டளை மற்றும் வவுனியா மாவட்ட சமூக சேவை திணைக்களத்துடன் இணைந்து இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

(ம)

# தென்மராட்சிப் பகுதியில் வறியவர்களுக்கு வீடுகள்

தென்மராட்சி, ஜூன் 3

தென்மராட்சி பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் 'உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்' என்னும் திட்டத்தில் வறுமைக்குட்பட்ட பத்து குடும்பங்களுக்கு தலா 6 லட்சம் ரூபா செலவிலான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென பிரதேச செயலகத்தினால் அனுப்பப்பட்ட பயனாளிகளில் 20 பேரின் பெயர்ப்பட்டியல் மாவட்டச் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டு இவர்களில் முன்னுரிமை அடிப்படையில் 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ம-9)

# சாதாரண பெரும்பான்மையும் ஆளுங்கட்சிக்குக் கிடைக்காது

## லக்ஷ்மன் கிரியெல்ல ஆருடம்

கொழும்பு, ஜூன் 3

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியால் சாதாரண பெரும்பான்மையைக்கூட பெறமுடியாது என கருத்துக் கணிப்பு மூலம் உறுதியாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஈஸ்டர் தாக்குதலால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாமல்போனது. தற்போது நிலைமை மாறியுள்ளது. அரசின் இயலாமையை மக்கள் உணர்ந்து விட்டனர்.



ஜனாதிபதித் தேர்தலின்போது எமது குழு சமூகவலைத்தளங்கள் ஊடாக நடத்திய கருத்துக் கணிப்பின் பிரகாரமே ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் அமைந்தன. தற்போதும் நடத்தப்பட்டுள்ளன. ஆளுங்கட்சிக்கு இணையாக ஐக்கிய மக்கள் சக்தி இருக்கின்றது. எனவே, அரசாங்கம் கூறுவதுபோல மூன்றிலிரண்டு பெரும்பான்மை அல்ல, சாதாரணப் பெரும்பான்மையைக்கூட அதாவது 113 ஆசனங்களைக்கூட பெறமுடியாது. உறுதியாகவே இந்தத் தகவலை வெளியிடுகின்றேன்-என்றார். (ம-44)

# செயற்கை மணல் இடுவதற்கு ஜனவரி மாதமே அனுமதி

## பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு தெற்கு செயற்கை மணல் இடுதல் வேலைத்திட்டம் தொடர்பான அமைச்சரவை முடிவுக்கு இந்த வருடம் ஜனவரி 22 ஆம் திகதியன்றே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மீன்பிடி சமூகத்தின் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்காக இந்தத் திட்டம் ஏப்ரல் மாதத்தில் ஊரடங்கு காலத்திலும் அவசர அவசரமாகச் செயற்படுத்தப்பட்டதுஎன்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த திட்டத்தை கடலோரப் பாதுகாப்புத் துறை திட்டமிட்டு செயற்படுத்தியது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது கடலோர பாதுகாப்புத்துறை அவரின் கீழ் செயற்பட்டது. எனவே மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சுக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் கடந்த ஜனவரி 22 ஆம் திகதி கடலோர சீர்திருத்த நடவடிக்கை தொடர்பான அமைச்சரவை முடிவுகள் எட்டப்பட்டு இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. மீன்பிடி சமூகத்தின் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்காக இந்தத் திட்டம் ஏப்ரல் மாதத்தில் ஊரடங்கு காலத்திலும் அவசர அவசரமாகச் செயற்படுத்தப்பட்டது - என்றார்.

(ப)

# யாழ். நூலகம் எரிக்கப்பட்டது ஜூன் முதலாம் திகதியன்றே!

## அடித்துக் கூறுகிறார் அவைத்தலைவர் சி.வி.கே.

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

**யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு 39 ஆவது நினைவு தினம் நிறைவடைந்துள்ளது. இந்த நூலகத்தைப் பொறுத்தவரை அது தமிழ்த் தேசியத்தின் பொக்கிஷம், சொத்து என்பது எல்லோரும் அறிந்த விடயம். ஆனால் இப்பொழுது அண்மைக்காலமாக இந்த நூலகம் எரிக்கப்பட்ட திகதி மிகத் தவறாக ஊடகங்களிலும் நூல்களிலும் எழுதப்பட்டு வருகின்றது. ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வின் திகதி தவறாக முன்வைக்கப்படுவதை அந்த நிகழ்வோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவன் என்ற வகையிலே அதை தெளிவுபடுத்த வேண்டிய தேவை எனக்கு இருக்கின்றது.**

உண்மையாக இந்த நூலகம் எரிக்கப்பட்டது ஜூன் மாதம் என்று எல்லோரும் இதுவரையில் பேசி வந்திருக்கின்றோம். மே மாதம் என்று 31 ஆம் திகதி என்று வருகின்றபோது ஒரு வரலாறு திரிவுபடுத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்திலே நாங்கள் நூலகம் எரித்தபோது உடனடியாக இதற்கான மீள் நிரப்புச் சம்பந்தமாக நிதி உதவிகோரி ஓர் ஆவணத்தை வெளியிட்டிருந்தோம். அந்த ஆவணத்திலே முதலாவது ஆரம்பமே 1981 ஜூன் மாதம் முதல் நாளிலே இராப் பொழுதில்தான் யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தின் விலை மதிக்க முடியாத 97 ஆயிரம் புத்தகங்கள் கிடைத்தற்கரிய பல கையொழுத்து பிரதிகளுடன் சாம்பலாக்கப்பட்டதும் கட்டடவியல் வடபகுதியின் பெருமைக்குரிய ஒரு கட்டடம் பாரதூரமான சேதத்திற்குள்ளாகியதும் ஆகும். இந்த ஆவணம் 1981 ஆம் ஆண்டு இறுதியில் அதாவது 1982 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிதி சேகரிப்புக்காக வெளியிடப்பட்ட ஆவணம். இதிலே ஆங்கிலத்திலும் "IT was the first of june. 1981 and the hours of the night, when the priceless collection of 97,000 books and some raremanuscripts in the Jaffna public Library were burned to ashes and a building which was the architectural pride of the North burnt and severely damaged." இதுவும் அதாவது ஜூன் மாதம் முதலாம் திகதி இரவு என்பதை இந்த இரண்டு ஆவணமும் உறுதிப்படுத்துகின்றது.

அதேநேரம் இந்த நூல் நிலையம் பற்றி என்னுடைய கருத்தியலையும் நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். நூலகம் 01.06.1981 ஆம் திகதியில் இரவோடு இரவாக தீக்கிரையாக்கப்பட்டது என்பது என்னுடைய கருத்து. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் நாங்களும் வரலாற்றோடு இருக்கிறவர்கள் என்பதால் மிக முக்கியமான விடயத்தினுடைய வரலாறு தவறான திகதியின் அடிப்படையிலே முன்கொள்ளப்படுகின்றது. இன்றைய ஊடகங்களிலே கூட மே 31 ஆம் திகதி என்று எழுதப்பட்டிருக்கின்றது. இது ஒரு சரியான வரலாற்று தவறாக அமையலாம். என்னுடைய விடயம் இந்த நூலகம் 01.06.1981 ஆம் திகதி இரவில்தான் எரிக்கப்பட்டது என்பதுதான். இன்று இதை நான் தெளிவுபடுத்த வேண்டும். இதை தெளிவுபடுத்துவதற்கு நான் இன்னமும் உயிரோடு இருக்கின்றேன். நானும் உயிரோடு இல்லை என்றால் இது எல்லாம் இல்லாமல் போகும்- என்றுள்ளது. (ப)



## சுகநல மேம்பாட்டுக் குழு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

கொரோனா வைரஸ் போன்ற பெருந்தொற்றுக்கள், எதிர்காலத்தில் ஏற்படும் போது, கிராம மட்டத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 'சுகநல மேம்பாட்டுக் குழு' யாழ்ப்பாணம் மறவன்புலோ கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் நல்லதம்பி தனபாலசிங்கம் தலைமையில் மறவன்புலவு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் அண்மையில் இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

டெங்கு, கொரோனா, மலேரியா போன்ற தொற்று நோய்கள் எதிர்காலத்தில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை, கிராம மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கும், அதேபோன்று போதைப்பாவனை, பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, சிறுவர் துர்நடத்தை போன்ற அனைத்து வகையான சமூகப் பாதிப்புக்களையும் இல்லாதொழிக்கும் நோக்கில் பொது அமைப்புகளை உள்ளடக்கியதாக இந்த சுகநல மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், தென்மராட்சி பொதுச் சுகாதார மேற்பார்வையாளர் பி.பிரபாகரன், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, குடும்ப நல உத்தியோகத்தர் உள்ளிட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். (ம-111)

## எரிபொருள் விலைகள் இலங்கையில் உயர்வு

### பாகிஸ்தான் பிரதமர் சுட்டிக்காட்டு

தெற்காசியப் பிராந்திய நாடுகளில் பாகிஸ்தான் எரிபொருள் விலைகளை மிகவும் குறைவாக நிர்ணயித்திருக்கும் அதேவேளை, பாகிஸ்தானை விடவும் இலங்கையில் எரிபொருள் விலைகள் 50 -75 சதவீதம் வரையில் உயர்வாகக் காணப்படுவதாக அந்நாட்டுப் பிரதமர் இம்ரான்கான் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவர் தனது டுவிட்டர் பதிவிலேலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலால் உலக நாடுகள் பெரும் நெருக்கடி நிலையொன்றுக்கு முகங்கொடுத்திருப்பதுடன் உலகப் பொருளாதாரமும் தளம்பல் அடைந்திருக்கிறது.

இதனுடன் இணைந்ததாக எரிபொருள் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படும் நிலையில், தமது நாடு எரிபொருள்களின் விலைகளைப் பல மடங்கு குறைத்திருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அறிவித்திருக்கிறார்.

நாம் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளைப் பெருமளவால் குறைத்திருக்கின்றோம். தற்போது ஏனைய தெற்காசியப் பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பாகிஸ்தான் மிகக் குறைவான எரிபொருள் விலைகளைக் கொண்டிருக்கிறது. எனினும் எமது நாட்டின் எரிபொருள் விலைகளை விடவும் இருமடங்காக இந்திய எரிபொருள் விலை நிர்ணயம் காணப்படுவதுடன், இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பாகிஸ்தானை விடவும் 50 -75 வரையில் எரிபொருள் விலைகளில் அதிகரிப்பொன்று காணப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## காற்றால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிவாரணம்



கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் வீசிய கடுமையான காற்றால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான நிவாரண கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காற்றின் காரணமா்க 89 வீடுகள் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்திருந்தன.

பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் முற்பணமாக வழங்குவதற்கான ஏற்பாட்டை கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேற்கொண்டிருந்தது.

அந்த வகையில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியை, மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வருகின்றது. (க-222)

## அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது பாதுகாப்பு அமைச்சு கண்

கொழும்பு, ஜூன் 3

பதிவுசெய்யும்போது உரிய நடைமுறைகளை பின்பற்றாத அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆராயப்படவுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் சந்தேகத்துக்குரிய நிதி மூலங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பான விசாரணைகளை தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் ஆரம்பித்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலக பணிப்பாளர் நாயகம் ராஜா குணரத்ன தெரிவித்துள்ளதாவது:

நிறுவனங்களை பதிவு செய்யும் நடவடிக்கையில் உரிய நடைமுறைகளை மீறியதாகக் கருதப்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகமானது, அரச சார்பற்ற நிறுவனங்களின் பதிவுகள் மற்றும் செயல்பாடுகளை மேற்பார்வை செய்துவரும் அதேசமயம், அவற்றை கண்காணித்தும் வருகின்றது என்றார். (ஒ.5)



கிளிநொச்சியில் கழிவுப் பொருள்களைக் கொண்டு கார் ஒன்றைத் தயாரித்த மாணவனுக்கு முரசுமோட்டை மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் அமைப்பால் 75ஆயிரம் ரூபாவை உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. (ப-222)



# சாவகச்சேரி சந்தை மீளத் திறக்கப்பட்டது

சாவகச்சேரி, ஜூன் 3

சாவகச்சேரி பொதுச் சந்தை 70 நாள்களின் பின்னர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் வழமையான செயற்பாட்டுக்குத் திறக்கப்பட்டது.

தனிநபர் இடைவெளியைக் கருத்தில் கொண்டு வியாபாரிகளின் ஒப்புதலுடன் விற்பனைப் பிரிவுகளில், சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சந்தையில் பொலிஸார், சுகாதாரப் பகுதியினர், நகர சபை அலுவலர்கள் தேவையான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சந்தையில் வியாபாரம் செய்யும் அனைத்துப் பிரிவு வியாபாரிகளுக்குமான கலந்துரையாடல்கள் தனித்தனியாக நகரசபை தவிசாளரால் நடத்தப்பட்டது.

மக்களின் பாதுகாப்புக்கு தனிநபர் இடைவெளிகளை கட்டாயம் பேணவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

கொரோனாத் தொற்று காரணமாக கடந்த மார்ச் 24 ஆம் திகதி சாவகச்சேரி பொதுச் சந்தை மூடப்பட்டது. சபையின் 11 வட்டாரங்களிலும் தற்காலிக சந்தைகள் அமைக்கப்பட்டன. ஊரடங்கு தளர்த்தப்பட்ட காலங்களில் சந்தையின் சுற்றாடலில் உள்ள வீதியோரங்களில் வியாபாரிகள் தமது வியாபாரத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு-9)

# யாழில் டெங்கு தாண்டவம் அங்கு செல்வோர் கவனம்!

***சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் எச்சரிக்கை***

சாவகச்சேரி, ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் டெங்குவின் தாக்கம் அதிகம் உள்ளதால் அங்கு செல்லும் ஏனைய பிரதேச மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்தமாதம் டெங்கால் சாவகச்சேரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் ஆறு பேர் யாழ்ப்பாணத்தில் உறவினர் வீடுகளில் தங்கி சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்களென விசாரணைகளில் அறியமுடிந்தது. இதனால் யாழ்ப்பாணம் செல்லும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் அவதானமாகச் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் வழங்கிய முழுமையான ஒத்துழைப்பினால் பிரதேசத்தில் டெங்குவின் தாக்கத்தைக் குறைக்க முடிந்தது. கடந்த மார்ச் மாதத்தில் 5 பேரும் ஏப்ரல் மாதத்தில் 4 பேரும் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். (ம-9)

# மூன்றாம் கட்டநிலையில் வெட்டுக்கிளிகளின் படை

கொழும்பு, ஜூன் 3

**உலகை அச்சுறுத்தி வரும் வெட்டுக்கிளிகள் இனம் இலங்கையிலும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த வெட்டுக்கிளிகள் மூன்றாவது கட்ட வளர்ச்சி நிலையில் உள்ளன என்று விவசாய சேவைகள் பணிப்பாளர் டபிள்யூ. எம்.டபிள்யூ வீரக்கோன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவத்தகம நகருக்கு அருகிலுள்ள மீபல்லேகம கிராமசேவகர் பிரிவில் பரவலாக வெட்டுக்கிளிகள் காணப்படுகின்றன. இதனால் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களும் வெட்டுக்கிளிகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் ஒரு மாதத்திற்கு முன்னர் வெட்டுக்கிளிகள் அடையாளம் காணப்பட்டன. தற்போது அங்கு ஆயிரக்கணக்கில் அவை பெருகிவிட்டன. இப்பொழுது அந்தப்பகுதியிலுள்ள அனைத்து விவசாய நிலங்களிலும் வெட்டுக்கிளிகள் காணப்படுகின்றன.

இந்த இனம் தற்போது நம் நாட்டிற்குரிய வெட்டுக்கிளி இனமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த இனம் தற்போது 3ஆம் கட்ட வளர்ச்சி நிலையில் உள்ளதாகவும், நான்காம் வட்ட வளர்ச்சி நிலையிலேயே இறக்கைகள் வளர்வதாகவும், இந்த கட்டத்தை அடைந்தாலேயே மற்றைய இடங்களுக்கு பரவி பேராபத்தை ஏற்படுத்தும் என்பதும் தெரியவந்துள்ளது. தற்போதைய நிலையில் இதன் வளர்ச்சி ஆபத்தான கட்டத்தில் உள்ளது - என்றார். (ம)

### இலங்கைக்கு எதிராக

# ஐ.நா. சபையில் மற்றொரு தீர்மானம்?

இலங்கைக்கு எதிராக 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மற்றுமொரு தீர்மானத்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா தீர்மானத்தில் இருந்து இலங்கை விலகியமை குறித்து கவனத்தில் எடுக்காமல், மீண்டும் தீர்மானம் ஒன்றை கொண்டுவர பிரிட்டன் தலைமையிலான ஐந்து நாடுகள் தீர்மானித்துள்ளன.

புலம்பெயர் தமிழர்களின் கடும் அழுத்தங்களின் அடிப்படையில் இந்த விடயம் மேற்கொள்ளப்படுவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்திலிருந்து விலகியதாக இலங்கை, ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அறிவித்துள்ளபோதிலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்க முடியாது என்று ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அங்கம் வகிக்கவில்லை என்பதுடன் கண்காணிப்பு மட்டத்தில் செயற்பட்டு வருகின்றமையால், கண்காணிப்பு மட்டத்திலிருந்தும் விலகுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த மே மாதம் இடம்பெற்ற போர் வெற்றிவிழாவின்போது உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, சர்வதேசம் இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்குமாக இருந்தால், சர்வதேச கட்டமைப்புக்களிலிருந்து இலங்கை தனது உறுப்புரிமையை நீக்கிக்கொள்ள பின்வாங்காது என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### கொரோனா அலை என்றபோதும்

# சமூகத் தொற்று ஏற்படவில்லை

### சுகாதாரத் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

கொரோனா வைரஸ் தாக்கத்தின் இரண்டாவது அலை குறித்து சுகாதார தொழிற்சங்கங்கள் கவலை எழுப்பியிருந்தபோதிலும், எந்தவொரு சமூகப் பரவலும் இதுவரை ஏற்படவில்லை என்று சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் விடுமுறையில் இருந்த இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, சமூகத் தொற்று குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதாத் சமரவீர, இலங்கையில் தற்போதுவரை எந்த சமூக தொற்று நோயாளிகளும் அடையாளம் காணப்படவில்லை என்று உறுதியளித்தார். கொரோனா வைரஸ் தொற்று உறுதியான இராணுவ அதிகாரி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபருடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த இராணுவ அதிகாரி விமான நிலையத்தில் பணியில் ஈடுபட்டிருந்தபோது குவைத்திலிருந்து திரும்பிவந்த ஒரு குழுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. இதனை அடுத்தே வைரஸ் தொற்று தொடர்பான பரிசோதனை நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# மாணவர்களை இணைப்பது மட்டில் கல்வி அமைச்சால் புதிய தீர்மானம்

கொழும்பு, ஜூன் 3

தரம் ஒன்றில் மாணவர்களை இணைப்பது தொடர்பான கல்வியமைச்சின் புதிய வழிகாட்டல் குறிப்பின்படி, ஒவ்வொரு வகுப்பிலும் அதிகபட்சமாக 35 மாணவர்களே இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

கல்வியமைச்சு இந்த வாரம் வெளியிட்ட வழிகாட்டல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:

அடுத்த ஆண்டில் பாடசாலைகளில் இணைக்கப்படும் மாணவர்கள் தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய ஆவணங்கள், மேன்முறையீட்டு விவரங்களுக்கு கல்வியமைச்சின் www.moe.gov.lk என்ற இணையத்தை அணுகவும். அனைத்து ஆவணங்களின் தகுதிகளும் விண்ணப்பதாரருக்கு தானாகவே சான்றிதழ் அளித்து வாக்குமூலம் அளிக்க வேண்டும். விண்ணப்பதாரரின் பெயர்மற்றும்முகவரிமுத்திரையிடப்பட்ட உறைக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். தரம் ஒன்றில் ஒவ்வொரு இணை வகுப்பிற்கும் முப்பது மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். மேலும், பாதுகாப்புப்படைகள் மற்றும் காவல்துறையினரின் மேலும் ஐந்து மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 35ஆக இருக்கும். அனைத்து அரச பாடசாலைகளிலும் மாணவர்களைச் சேர்… செயல்பாட்டில், வசதிகள் மற்றும் சே… கட்டணங்கள் மற்றும் உறுப்பின… ணங்களுக்கான பாடசாலை கட்… தவிர, வேறு எந்த கட்டணங்கள்… கொடைகள் அல்லது எந்த… பொருட்கள் அல்லது உபகரண… யும் பாடசாலை, பாடசாலை… இணைந்த நிறுவனங்களுக்கு வ… வது தடைசெய்யப்பட்டுள்ளது' எ… ளது.

# பாரவூர்தியின் பாகங்களை திருட முயன்றவர் கைது



ஹற்றன், ஜூன் 3

பார ஊர்தி ஒன்றின் பாகங்களைத் திருட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. ஹற்றன், நோர்ட்டன் பிரதான வீதியில் காஸல்ரீ பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியின் பாகங்களையே சந்தேக நபர் திருட முயன்றார் என்று கூறப்படுகின்றது. மக்கள் அவரைப் பிடிக்க முயன்றபோது அவர் தேயிலைத் தோட்டத்துக்குள் ஒளித்துக் கொண்டார் என்றும், மக்கள் அவரைத் தேடிப் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஹற்றன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து சந்தேகநபரைக் கைது செய்தமையுடன், சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (எ-ரீ)

# குற்றச்சாட்டு உள்ளோருக்கு பதவி வழங்கும் கோத்தாபய

## சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்றிட்டம் கடும் கண்டனம்



கொழும்பு, ஜூன் 3

**இறுதிப் போரில் மனித உரிமை மீறல்களிலும், சட்டவிரோதத் தடுத்துவைப்புகளிலும், சித்திரவதைகளிலும் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி தொடர்ந்து பதவியுயர்வுகள் வழங்குகின்றார். அவற்றை நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.**

இவ்வாறு சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்றிட்டத்தின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

'இன்னமும் தொடரும் சர்ச்சைக்குரிய இராணுவப் பதவியுயர்வுகள்' எனும் தலைப்பில் நேற்றுமுன்னதினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2009 ஆம் ஆண்டில் தமிழ் வைத்தியர் ஒருவரை அச்சுறுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரி டுவான் சுரேஷ் சாலேயை மேஜர் ஜெனரலாக ஜனாதிபதி பதவியுயர்த்தியிருக்கிறார்.

வைத்தியர் துரைராஜா வரதராஜா 2009 ஆம் ஆண்டில் போர் வலயத்தில் பணியாற்றிய ஓர் அரச வைத்தியர் என்பதுடன், போர்முடிவடைந்த பின்னர் சுமார் 100 நாள்கள் வரையில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இத்தகைய முறையற்ற தடுத்து வைப்பு மற்றும் மனிதாபிமானமற்ற சித்திரவதைகள் என்பன சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்துக்கு முற்றிலும் முரணானவையாகும். அவர் பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றிய ஒரு தைரியமான வைத்தியராவார். அவருக்குப் பதக்கம் அணிவித்து கௌரவிக்க வேண்டுமே தவிர, இவ்வாறு தடுத்துவைத்தமை ஏற்புடையதன்று. தற்போது வைத்தியர் வரதராஜா ஐக்கிய அமெரிக்காவில் கொவிட்19 கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றமையுடன், அவர் தனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளுக்குப் பொறுப்பான முன்னாள் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரியாக சுரேஷ் சாலேயை அடையாளம் காட்டியிருக்கிறார்.

சுரேஷ் சாலே தம்மை நீண்டகாலமாக அச்சுறுத்தினார் என்று கூறியிருக்கும் வைத்தியர், அப்போதைய பாதுகாப்புச் செயலாளரான கோத்தாபய ராஜபக்ஷவின் கட்டளையின்படியே அவற்றைத் தாம் செய்தார் என சுரேஷ் சாலே குறிப்பிட்டார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

போர் வலயத்தில் சேவையாற்றிய வைத்தியர்கள் அங்கு இடம்பெற்ற உயிரிழப்புக்கள் தொடர்பில் ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்குபவர்களாக இருப்பார்கள் என்பதாலேயே அவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர். அதேபோன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடந்த வாரம் பிரசன்ன டி அல்விஸ் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரும் போர்க் காலச் சித்திரவதைகளுடன் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டவராவார். அதுமாத்திரமன்றி பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பிலும் பிரசன்ன டி அல்விஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

நெடுங்காலமாகப் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றியதுடன், குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானபோது ஒருவரையொருவர் காப்பாற்றிக் கொண்டவர்கள் தற்போது ஜனாதிபதியால் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்-என்றார். (எ)

# பொலிஸ் பொறுப்பதிகாரியை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஜூன் 3

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியான உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடலவைப் பிடியாணை பெற்றுக் கைது செய்யுமாறு கொழும்பு குற்றவியல் பிரிவுக்கு அறிவித்துள்ளார் சட்டமா அதிபர். முன்னாள் அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க விபத்து ஏற்படுத்தினார் என்று கூறப்படும் வழக்கில் போலியான சாட்சியங்களைச் சோடித்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவரைக் கைது செய்ய சட்டமா அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்று சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார். (எ-ரீ)

# யப்னா கேற்வே லயன்ஸ் கழகத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ் நுழைவாயில் (யப்னா கேற்வே) லயன்ஸ் கழகத்தின் 2020/2021 ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தலைவராக லயன் என்.சதீஸ்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கழகத்தின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் கழகத் தலைவர் லயன் செ.சத்தியபவன் தலைமையில் நடைபெற்றது. அதில் 2020/2021 ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. புதிய தலைவராக லயன் என்.சதீஸ்குமாரும், செயலாளராக லயன் எஸ்.சவீதனும், பொருளாளராக லயன் பி.பரிஸ்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)




# ஊடகவியலாளர் நடேசனின் நினைவேந்தல் வவுனியாவில்

வவுனியா, ஜூன் 3

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனுக்கு வவுனியாவில் நினைவேந்தல் நடத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ம-110)

# கட்சிச் சிக்கலுக்காக எதிரணி மக்கள் உரிமையை மறுக்கிறது

## இப்படிக் கூறுகிறார் வாசுதேவ

கொழும்பு, ஜூன் 3

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ப பாதுகாப்பான சூழல் தற்போது காணப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் தங்களின் உள்ளகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள மக்களின் ஜனநாயக உரிமையைச் சவாலுக்குட்படுத்தியுள்ளமை தவறான செயற்பாடு.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. வைரஸ் பரவல் இதுவரையில் சமூகத் தொற்றாகவில்லை. பொதுத்தேர்தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்துடன் வாழ மக்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்கள். பொதுத்தேர்தலை விரைவாக நடத்துவதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன தங்களின் கட்சி உள்ளகப் பிரச்சினையைத் தீர்க்க மக்களின் அடிப்படை உரிமைகளைக் கேள்விக்குட்படுத்துவது பொருத்தமற்றது.

எதிர்த்தரப்பினர் தங்களின் உள்ளகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவே பொதுத்தேர்தலுக்கான திகதியைச் சவாலுக்குட்படுத்தி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். இந்தச் செயற்பாடு மக்களின் ஜனநாயக உரிமைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அரசியல் ரீதியில் எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமும் பொதுத் தேர்தலில் ஏற்படாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆதரவைப் பெற்றுப் பலமான அரசை அமைக்க முடியும். - என்றார். (எ)

# அதிகாரங்கள் இருப்பதால் சட்டங்களை மீற முடியாது

## அனில் ஜாசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

**கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் நாட்டில் வாழும் 2 கோடியே 20 இலட்சம் மக்களுக்கும் பொதுவானது. ஒரு குடும்பமோ அல்லது அதிகாரத்தில் உள்ள எவரும் அதை மீறமுடியாது என சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.**



கொவிட் 19 வைரஸ் தொற்றுநோய் பரவல் குறித்த அச்சுறுத்தல் நிலவுகின்ற நிலையில் சுகாதாரப் பணிப்பகத்தின் செயற்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் இதனைக் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளன என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியும். இப்போது வரையில் தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்களிடம் மட்டுமே வைரஸ் தொற்று கண்டறியப்படுகின்றது. அதற்கும் அப்பால் வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டவர்களில் அதிகளவில் நோய் கண்டறியப்படுகின்றது. குவைத்தில் இருந்து வருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு வெறுமனே எமக்கோ பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மட்டுமோ உள்ள கடமை அல்ல. நாட்டிலுள்ள அனைவருக்கும் அதில் பொறுப்புடன் செயற்படும் கட்டாயம் உள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் நாட்டில் வாழும் 2 கோடியே 20 இலட்சம் மக்களுக்கும் பொதுவானது. ஒரு குடும்பமோ அல்லது அதிகாரத்தில் உள்ள எவரும் அதனை மீறமுடியாது. அவ்வாறு மீறுவதனால் நாம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகி விடும் என்பதையும் நாம் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் - என்றார். (ப)

# தனியார் பேருந்துகளுக்கு காப்புறுதி வழங்கக் கோரிக்கை

நாட்டில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு தனியார் பேருந்துகள் மற்றும் அதில் பயணிக்கும் பயணிகளுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்த வேண்டும் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் சுமார் 4 ஆயிரம் பேருந்து உரிமையாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர். பேருந்துகளுக்குக் காப்பீட்டுத் தொகை ஒன்றை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

# கொரோனா பரவாதிருக்க முன்னெச்சரிக்கை தேவை

## கரு ஜயசூரிய அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 3



கொரோனா வைரஸ் பரவலால் முடக்கப்பட்டிருந்த நாடு மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கும் நிலையில், நாட்டு மக்களும் அரசியல் தலைவர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்று வலியுறுத்தியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பேணாவிடின் மீண்டும் வேகமாக கொரோனா வைரஸ் பரவல் இடம்பெற வாய்ப்பிருக்கிறது என்றும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது;

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் இலங்கை ஓரளவுக்கு வெற்றி கண்டிருக்கிறது. எனினும் முடக்கப்பட்டிருந்த நாடு மீண்டும் திறக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்திருக்கும் நிலையில் நாட்டுமக்களும், தலைவர்களும் மேலதிக அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

நாம் முன்கூட்டியே சரியான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின், எதிர்பாராத வேளையில் கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் இடம்பெற வாய்ப்பிருக்கிறது என்பதற்கு உலகநாடுகள் பலவும் உதாரணமாக இருக்கின்றன - என்றார். (ப)

# மழைக்கு சாத்தியம்


கொழும்பு, ஜூன் 3

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் இடையிடையே மழை பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள், பொலனறுவை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காற்றின் வேகம் இடையிடையே 40 கிலோமீற்றர் வேகத்தில் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-ரி1)

# பாலைமீன் வளர்ப்புத் தொடர்பான கலந்துரையாடலும், களப்பயணமும்

மன்னார், ஜூன் 3



மன்னார் அச்சங்குளத்தில் பாலைமீன் வளர்ப்புத் தொடர்பான கலந்துரையாடலும், களப் பயணமும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையகத்தால் மன்னார் நானாட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட அச்சங்குளம் கடற்கரை ஓடைப்பகுதியில் பாலைமீன் வளர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்காக அச்சங்குளம் கடற்கரை ஓடைப்பகுதியில் பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடங்களை தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையக தவிசாளர் அழகையா நவரெட்ணராஜன் நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார் மற்றும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சென்று பார்வையிட்டபின் இதுதொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார்கள்.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை ஆழ்கடலில் பிடிக்கப்படும் சூரை மீன்களுக்குப் போடும் இரையானது வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் அந்நியச் செலவு அதிகரிக்கின்றது. அதனால் அதற்குரிய பாலைமீன்களை உள்ளூரில் உற்பத்தி செய்யும்போது அந்நியச் செலவு குறைக்கப்படுவதுடன் உள்ளூர் மீனவர்களுக்கு தொழில்வாய்ப்பும் கிடைக்கின்றது. அதனால் நாட்டுமக்களுக்கு நன்மைபயக்கும் திட்டமாக பாலைமீன் வளர்ப்புத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-56)

# வெதுப்பக தொழிலுக்கு கொரோனாவால் ஆபத்து

கொழும்பு, ஜூன் 3

கொரோனாத்தொற்றின் காரணமாக தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத்தொற்றுக் காரணமாக இருப்பிடங்களுக்குச் சென்ற ஊழியர்களை மீண்டும் அழைப்பதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது என்றும் சங்கத்தின் தலைவர் என். கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (எ-ரி1)

# துப்பாக்கி மீட்பு பெண் கைது

சிலாபத்துறை, மருச்சிகட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-ரி1)

# களஞ்சியத் திரிபோஷாவை வழங்குவதற்கு நடவடிக்கை

திரிபோஷா உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தாலும், களஞ்சியத்தில் உள்ள திரிபோஷாவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஜாஎல திரிபோஷா தொழிற்சாலையின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுகாதார அதிகாரி அலுவலகத்துக்கு திரிபோஷா விநியோகம் முறையாக நடைபெறுவதில்லை என்று அரச குடும்ப நலச் சேவைச் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்துள்ளார். சில சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் திரிபோஷா வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திரிபோஷா வழங்கலுக்கான கேள்வி அறிவிப்புத் தொடர்பான பிரச்சினையாலேயே திரிபோஷா உற்பத்தி சில வாரங்களாக நிறுத்தப்பட்டுள்ளது என்று ஜாஎல திரிபோஷா தொழிற்சாலையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மே மாதம் முதல் வாரத்தில் மக்காச் சோளத்துக்கு நிர்ணய விலை அறிவிக்கப்பட்டதை அடுத்து, ஒரு கிலோ 55 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் திரிபோஷா நிறுவனம் கேள்வி அறிவித்தலுக்கு அமைய ஒரு கிலோ மக்காச் சோளத்தை 58 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருந்தது. ஆனால் நிர்ணய விலை அறிவிப்பின் பின்னர் கேள்வி அறிவித்தலை விடுத்து அதற்கமைய செயற்பட தீர்மானித்தது. இதற்குச்சிலகாலம் தேவைப்பட்டதாலேயே திரிபோஷா உற்பத்தி தாமதமானது என்றும் தொழிற்சாலையின் தலைவர் தெரிவித்தார். (எ-ரி1)

# சர்வாதிகாரிகளின் ஆட்சிக்கு தேர்தலில் முடிவு கட்டுவோம்!

*சஜித் பிரேமதாஸ திடசங்கற்பம்*

"உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்கின்றோம். அதற்குத் தலைவணங்குகின்றோம். அதேநேரம், பொதுத் தேர்தலில் போட்டியிடவும் தயாராகவே இருக்கின்றோம். சர்வாதிகாரிகளின் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்ட உறுதிபூண்டுள்ளோம்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு, நாடாளுமன்றத் தேர்தல் திகதி (ஜூன் 20) வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ள நிலையில் மேற்படி கருத்தை அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொரோனாவின் பாதிப்புக்குள் மக்கள் சிக்கித் தவித்தபோது அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டே நாடாளுமன்றத் தேர்தலை எதிர்த்தோம். ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்த வேண்டாம் என்று வலியுறுத்தினோம். எமது இந்த வலியுறுத்தலை அடுத்தே ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என உயர்நீதிமன்றத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேர்தலுக்கு எதிரான மனுக்கள் தற்போது தள்ளுபடி செய்யப்பட்டாலும் ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடக்காது என்பது உறுதியாகியுள்ளது. எனவே, புதிய தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். கொரோனா வைரஸிலிருந்து மக்களைப் பாதுகாத்து நீதியான தேர்தல் நடக்க நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்"-என்றார். (து-22)

# 3 நாள்களில் 21,000 ஒப்பம்

## கூறுகிறார் மைத்திரிபால

**கொழும்பு, ஜூன் 3**

**மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து இலங்கை அழைத்து வருவதற்காக நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தாம் மேற்கொண்ட முயற்சிகளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவரித்துள்ளார்.**



இதற்காக, சட்டமா அதிபர் வரைந்த ஆவணங்களில் தாம் 21 ஆயிரம் தடவைகள் கைச்சாத்திட்டார் என்றும், இதற்கு மூன்று நாள்கள் சென்றன என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

பொலனறுவையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மகேந்திரனை நியமித்தபோது, தாம் அதனை வலுவான முறையில் ஆட்சேபித்ததாக மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஆட்சி அமைத்து, இரு வாரங்களுக்குள் தமக்கும் முன்னாள் பிரதமருக்கும் இடையில் பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக அர்ஜுன் மகேந்திரனின் நியமனத்தை ஏற்கும் நிர்ப்பந்தம் உருவானது.

எனது பதவிக்காலத்தில் 5 ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தேன். அதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழு இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது,- என்றார். (ஒ,5)

# உரும்பிராய் இளைஞன் கைது

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து 60 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-20)

# மோதலில் அறுவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 3

இளைஞர் தாக்கப்பட்டதன் எதிரொலியாக இரண்டு பகுதியினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் பெண் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் மட்டுவில் தெற்கில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

மோதலில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த 17 வயது, 19 வயது, 20 வயது இளைஞர்கள் நால்வரும், மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 27 வயது பெண் மற்றும் 19 வயது இளைஞருமாக ஆறு பேர் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-9)

## நெல்லியடிச்...

திறக்கப்பட்டபோதும், கொரோனா நோய்த் தொற்றுக்கு ஏதுவாக பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்த சுகாதாரத் திணைக்களத்தினர் சந்தையை மூடியிருந்தனர்.

இந்தநிலையில், நெல்லியடிச் சந்தை வளாகத்தில் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செயலர், சுகாதார மருத்துவ அதிகாரி, நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வியாபாரிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது. குறைபாடுகளாகக் காணப்பட்ட கை கழுவும் வசதிகள் திருப்தியின்மை, தனியாள் இடைவெளிகளைப் பேணாமை, பொதுமக்களும் விற்பனையாளர்களும் முகக்கவசம் அணியாமை, சந்தையினுள் ஒருவழிப் பாதை ஏற்படுத்தப்படாமை மற்றும் சந்தையினுள் தனியாள் இடைவெளிக்கான அடையாளங்கள் இடப்படாமை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதனையடுத்து இன்று தொடக்கம் சந்தை வழமைபோல் இயங்கும் என்றும் இதனைக் கண்காணிப்பதற்கு பிரதேச சபை தவிசாளர், ஐந்து பிரதேச சபை நிர்வாக அலுவலர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலரின் பிரதிநிதி ஆகியோர் சில வாரங்களுக்குத் தொடர் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. பொது மக்கள் இதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அனைத்துத் தரப்பினராலும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (து)

## கல்வி...

சேர்ந்த பத்மநாதன் தெய்வேந்திரம் (வயது-59) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இரவுக் கடமையில் இருந்த காவலாளியை காலையில் அருகிலுள்ள பாடசாலையின் காவலாளி வந்து கூப்பிட்டுள்ளார். அவர் வெளியே வரவில்லை. பின்னர் தேடியபோது அவர் வழமையாகப் படுத்துறங்கும் கட்டிலில் சடலமாகக் காணப்பட்டார்.

பருத்தித்துறை பொலிஸாரின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டு விசாரணை மற்றும் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (க-173)

## பெண்...

கிளிநொச்சி முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்பெற்று வரும் பகுதியில் எலும்புக் கூடுகள் கடந்த மாதம் 22 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டன. அதையடுத்து சில நாள்களில் ஓர் எலும்புக் கூடு மீட்கப்பட்டிருந்தது. அது பெண் போராளியினுடையது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கிளிநொச்சி நீதிவான் த.சரவணராஜா மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் முன்னிலையில் அகழ்வுப் பணி நேற்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது மற்றொரு பெண் போராளியினுடைய எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதனுடன் ஓர் இலக்கத்தகடும் மீட்கப்பட்டுள்ளது. அதில் 'த.வி.பு.ஞா. 0644' என்று அடையாளம் காணப்படுகின்றது. 'பி பிளஸ்' குருதி வகையை சேர்ந்தவர் எனவும் அந்த இலக்கம் சோதியா படையணியை சேர்ந்தவருடையது என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவற்றுடன் சைனட் குப்பி ஒன்றும் பெண் போராளிகள் இடுப்பில் அணியும் பட்டியும் மீட்கப்பட்டது. அதில் ஆனந்தி 109 என்று அடையாளம் இடப்பட்டுள்ளது.

34 ரவைகள், 2 மகசீன்கள், சீருடைகள், சில உரப்பைகள், வெற்று பால்மா பைக்கற்றுகள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன. அகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி தொடரவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-6)

# நாளையதினம் பொது விடுமுறை

கொழும்பு, ஜூன் 3

நாளைவியாழக்கிழமை அரச அலுவலகங்களுக்கு விடுமுறை நாளாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் ஊரடங்கு நடைறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)


## மரண அறிவித்தல்



**செல்வி**
**கந்தையா உமையம்மை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

மீசாலை மேற்கு, மீசாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட செல்வி கந்தையா உமையம்மை நேற்று (02.06.2020) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், கார்த்திகேசு, காலஞ்சென்றவர்களான நடராசா, கனகசபாபதி, சரஸ்வதி மற்றும் நல்லம்மா, இராமநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பெறாமக்கள்**
**பா.கோகுலன் (சமுர்த்தி உத்தியோகத்தர் தெ.பி.செ)**
**பா.இராகுலன் (கனடா)**

# கண்ணீர் அஞ்சலி



## பாலகிருஷ்ணன் ஜெயதீஸ்வரன்

அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபையில் நீண்ட காலமாக உறுப்பினராக இருந்து அம்பாளுக்கு பெரும் தொண்டாற்றிவந்த

**பாலகிருஷ்ணன் ஜெயதீஸ்வரன்**

அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்துகிறது.

நினைவும் கனவும் அம்பாள் என்றிருந்து அம்பாள் மகோற்சவ காலத்திலேயே அவனடி சரணடைந்து விட்டார்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பரிபாலன சபை
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்
உரும்பிராய்.**

# புதிய தலைமை அதிகாரி நியமனம்

இராணுவத்தின் புதிய தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜகத்குணவர்த்தன நியமிக்கப் பட்டுள்ளார் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 55ஆவது தலைமை அதிகாரியாக இவர் நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

# மரண அறிவித்தல்



**பிறப்பு** 12.08.1941 **இறப்பு** 02.06.2020

## சிவசர்மாகுருக்கள் பவானந்தசர்மா

துன்னாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசர்மாகுருக்கள் பவானந்தசர்மா நேற்று (02.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சிவசர்மா குருக்கள் தங்கம்மா அம்மா தம்பதியரின் அன்பு மகனும், அண்ணாச்சாமி ஐயர் இலட்சுமி அம்மா தம்பதியரின் மருமகனும், பத்மாவதி அம்மாவின் அன்புக் கணவரும், ஜெயகௌரியின் மைத்துனரும், கணநாதசர்மா, விக்னகரசர்மா- ஹானப்பிரியாவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானவைரவர் கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 04.06.1939 **மறைவு** 02.06.2020



## திருமதி நேசம்மா சரவணபவன்

கல்லுவம், கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும் மாலிசந்தி அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா சரவணபவன் நேற்று (02.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், மயில்வாகனம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணபவனின் (ஆசிரியர்) பாசமிகு மனைவியும், பாலசரஸ்வதி (ஆசிரியை, யா/மெதடிஸ்த மிசன் கல்லூரி,பருத்தித்துறை) காலஞ்சென்ற பாலபாரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகம்மா, கிருஷ்ணபிள்ளை, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஸ்வலிங்கம், இராசம்மா, விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2020) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாலிசந்தி, அல்வாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 23 . 02 . 1957



**மறைவு** 02 . 06 . 2020

## இராசையா அருள்நாதன் (குட்டி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா அருள்நாதன் நேற்று (02.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினி தேவி, காலஞ்சென்றவர்களான கமலநாதன், விமலநாதன் மற்றும் இரவீந்திரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சஞ்சீவன், கார்த்திகாயினி, சுஜீவன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வினித்தா, சுரேந்திரன், மிதிலா, சுதாகர் ஆகியோரின் பாசமிகு மாமனும், நித்ஷ், ரக்சிதா, யதுஷன், வபிஷன், அக்ஷயா, கம்ஷாயினி, வர்ஷினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

**நாகநாதன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,**

**தகவல் :
குடும்பத்தினர்,**

# சிரம்தாழ்த்தி விழிநீர் சொரியும்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தாய் மடியில்** 20.10.1950 **ஈசன் அடியில்** 19.05.2016

## அமரர் நாகரத்தினம் கணேஸ்வரி (தேவி)

**திதி-திரியோதசி**

உயிரை எடுத்தவனுக்கு உணர்வுகள்
எப்படி இருக்க முடியும் தாயே!
விலை மதிக்க முடியாத உயிர்களை
காவுகொள்ளும் எமனே! உன்னை
ஒன்று கேட்கிறேன் ஏனடா
உயிரான கணவரையும் - உயிரான
பிள்ளைகளையும், மருமக்களையும்
பேரப்பிள்ளைகளையும் நித்தம்
தவிக்கவிட்டு கூண்டை மட்டும் கவர்ந்து
சென்றாய் எமனே! புரண்டு படுத்தால்
நாம் இறந்து விடுவோம் என்று
கருவில் இருந்து நமக்காக
தூக்கத்தை தொலைத்த எம் தாயை
ஏனடா பறித்தாய்?
இன்று எங்களை தொற்றிக் கொண்ட
சோகத்தை யாரிடம் கூறுவது தாயே!
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து எங்களிடம்
வா அம்மா...
நான்கு ஆண்டுகள் என்ன
நாற்பது ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் அம்மா...

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உன் இழப்பால் நித்தமும் வாடும்
உன் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
(ஜேர்மனி)**

**தொம்பை வீதி,**

# Canada VISA

**நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்**

**STUDENT VISA** Study, Work & Settle

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

விசா பெற்றுக் கொண்டோர்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

**Hotline: 0777-761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute


Mr. Jegan - Director, Flex Institute

**10 வருட கால நம்பிக்கையான சேவை**


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
01 . 02 . 1945



விண்ணில்
04 . 05 . 2020

## தம்பிப்பிள்ளை குருநாதன்

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
எங்கு சென்று விட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம் - எமன்
உங்களில் பாசம் வைத்து அழைத்துவிட்டான்
நாங்களோ ஏது செய்வதென்று தெரியாமல்
தவிக்கின்றோம்.

கடந்த 04.05.2020 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவனின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (03.06.2020) புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:-அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தெரிவித்தோர், தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தோர் மற்றும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துகொள்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

VH ஒழுங்கை,
இருபாலை, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

மகன் - ஜனகன் (ஜனா)
077 7879 439
077 9393 928

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
13 . 04 . 1939



விண்ணில்
20 . 05 . 2016

## முத்தையா கிருஸ்ணசாமி

திதி :- பூர்வபட்ச சதுர்த்தசி
04.06.2020

நாள்கள் பலநூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமை போல எமைக்காத்த ஐயா - உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# முக்கிய அறிவித்தல்

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய

வருடாந்த வேள்விப் பொங்கல் விழா வானது எதிர் வரும் சனிக்கிழமை (06.06.2020) அன்று Covid-19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெறவுள்ள தால் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே கிடைத்துள்ளதி னால் அன்றைய தினம் பக்தர்கள் ஆலயத்திற்கு ஆடு கள், கோழிகளை கொண்டு வரவேண்டாம் என்பதையும் எதிர்வரும் 12.06.2020 அன்று இடம்பெறவுள்ள 8ஆம் மடை உற்சவத்திற்கு நேர்த்திக்காக படைக்கும் மடை, பொங்கல் என்பவற்றினை செய்வதினை தவிர்த்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தர்மகர்த்தா.

## வைத்தியசாலை அபிவிருத்தி குழு பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் பிரதேச வைத்திசாலை - முல்லைத்தீவு

பிரதேச வைத்தியசாலை முல்லைத்தீவுக்கான அபிவிருத்தி குழுவை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் இடம்பெற இருப்பதினால் வைத்தியசாலையின் வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்** : 20.06.2020 (சனிக்கிழமை)
**நேரம்** : முற்பகல் 10.00 மணி
**இடம்** : மாநாட்டு மண்டபம்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.
முல்லைத்தீவு.

Dr.T.நிரோசினி.
வைத்திய பொறுப்பதிகாரி,
பிரதேச வைத்தியசாலை.
முல்லைத்தீவு.

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 21.01.1954
இறப்பு 01.06.2020

எமது பரிபாலன சபை உறுப்பினரும் கற்பக விநாயகருக்கான மணிமண்டப நிர்மாணத்தின்போது பெரும் பங்காற்றியவர்களில் ஒருவருமான

## பா.ஜெயதீஸ்வரன் (ஈசன்ணை)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா ஒடையம்பதியானின் பொற்பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்
ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்
உரும்பிராய்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 . 02 . 1940



இறைவன் அடியில்
18 . 05 . 2019

அமரர்
## கனகரத்தினம் இராசம்மா

திதி-(வைகாசிப் பூரணை)

ஆண்டொன்று நாளொன்று போல்
ஓடி மறைந்தது அம்மா!
பாரினிலே உங்கள் முகம்
ஒரு முறை பாரோமா அம்மா!
நீங்கள் எம் நெஞ்சில் பதித்த நினைவுகள்
எம் உயிர் உள்ளவரை நீங்காது.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

# உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணையில்

சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைக்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவரை கைது செய்வதா வேண்டாமா என்பது பற்றிய உத்தரவை கொழும்பு நீதிமன்று இன்று வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சம்பிக்க அமைச்சராக இருந்தபோது அவர் பயணித்த வாகனம் மோதி ஒருவர் உயிரிழந்திருந்தார். அதன்போது வாகனத்தை செலுத்திச் சென்றது சம்பிக்க ரணவக்கவா அல்லது அவருடைய சாரதியா என்பது பற்றிய விசாரணை நீண்டு கொண்டிருக்கின்றது. அதன்போது, விபத்து நடந்த இடத்துக்குரிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்தவர், தற்போது சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரியாகவுள்ள சுதத் அஸ்மடல உரியவர்களை விசாரணை செய்திருக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த நிலையில் அது பற்றிய வழக்கிலேயே அவர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)


## விற்பனைக்கு

மிளகு கன்று, கொழும்பு வெற்றிலை மற்றும் பல இனக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:-077 612 9343**
**நியுலங்கா பாம்**
**பலாலி றோட் ஊரெழு மேற்கு**
**கணேசா பாடசாலைக்கு அருகாமை**

## பெயர்மாற்றம்

சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த **சரோசாதேவி ஆகிய** நான் 03.02.2020 இருந்து **சரோஜினி பற்றிசியா** என பெயர்மாற்றம் செய்கின்றேன்.
வெ. சரோஜினி பற்றிசியா

## காணி விற்பனைக்கு

பலாலி விமான நிலையம் K.K.S துறைமுகம் என்பவற்றுக்கு 1km தூரத்தில் 8,10,12,17 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**076 172 4033**

## A/L CHEMISTRY

- Online - Zoom Class

2020 - Ionic Equlibrium
2021 - Inorganic Chemistry
2022 - Chemical Calculation

ஆசிரியர் Mr.S.Suresh Kumar
Bsc (Hons) PGDE(Marit) MBA (Lon)

ஆரம்பம் 09.06.2020
பதிவுகளுக்கு:- 077 555 9028

## வீடு வாடகைக்கு

அடைக்கல மாதா கோவில், Human Right Commission Office அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. 05 அறைகள், 01 Store Room, Attached Bath உட்பட இரண்டு Tolets விசாலமான இரண்டு Hall, Car Park உடன் நவீனமயப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு:- 077 661 3486**

## பணியாளர் தேவை

இரும்புக்கடையில் அனுபவம் உடைய பணியாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு
**சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்**
**இல.55,57, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## வேலையாள் தேவை

கிளிநொச்சியில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் புதிய வீட்டுக்கு காவலுக்கு ஆள் தேவை.
தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் அத்தாட்சிக் கடிதமும் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**077 190 3165**

# முதலாம் ஆண்டு நினைவுருகல்



அன்னை மடியில்
14
.
11
.
1948

அரசடிப் பிள்ளையார் அடியில்
15
.
06
.
2019

திருமதி
## சறோஜினிதேவி கோபாலபிள்ளை

திதி:- வைகாசித் திங்கள் சதுர்த்தசி (04.06.2020)



பாசமுடன் எம்முடன் பழகிய அன்னையே
பாதியிலே எம்மை தவிக்க விட்டு போனீர்களே
யார் மனமும் நோகாமல் அரவணைத்த - அம்மா
யாரிடமும் சொல்லாமல் போனதென்ன மாயம் அம்மா
நெஞ்சம் பதபதைத்து செய்வதறியாது
துடிக்கின்றோம் - அம்மா
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை அம்பாள்
(அரசடி, பண்டாரகுள) பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

இல.2/1, மூத்த விநாயகர் வீதி,
கடுக்காயடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆறாத் துயரில் பரிதவிக்கும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
077 4047 922

# 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
14
.
01
.
1954



மறைவு
10
.
11
.
2019

## அமரர் வைத்திலிங்கம் அமிர்தலிங்கம்



ஓடிச் சென்றது ஆறுமாதம்
நாம் உங்களைப் பிரிந்து
உங்கள் பிரிவுத் துயர்
அன்றுபோல் இன்றும் எம் இதயத்தில்
உங்கள் இழப்பை எம் இதயத்தில் நிரப்பிட
எனி இங்கு யாருமில்லை....
மீண்டும் வந்து உதித்து விடுங்கள்
எம் உறவுகளுக்குள் உதய சூரியனாய்
உங்கள் வரவுக்காய் காத்திருக்கின்றோம்.

குடும்பத்தினர்

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30
11
1935

உதிர்வு
07
06
2017



அமரர் திரு.
## பொன்னையா பத்மநாதன்

திதி : பூர்வபக்க திரியோதசி



அமரர் திருமதி
## பத்மராணி பத்மநாதன்

திதி : அபரபக்க சதுர்த்தி

மலர்வு
21
01
1946

உதிர்வு
19
07
2011

நிஜமாக நீங்கள் மறைந்து ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்.
காலங்கள் ஓடிக்கடந்தாலும்
உங்களை எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

உசன், மிருசுவில். குடும்பத்தினர்.

# குரும்பசிட்டியில் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
பலாலி குரும்பசிட்டியில் கிணறு ஒன்றிலிருந்து நேற்று மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன.
வீட்டு உரிமையாளர் கிணறு இறைக்கும் பொழுது சந்தேகத்துக்கிடமான குண்டுகள் இருந்தமையைக் கண்டு பலாலி பொலிஸாருக்கு அறிவித்திருந்தார். பொலிஸார், விசேட அதிரடிப்படை மூலம் முப்பதுக்கும் மேற்பட்ட குண்டுகளை மீட்டனர். அவற்றை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. முன்னரும் இந்தப் பகுதியில் குண்டுகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-26)



# சிறையிலிருந்தே குற்றங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதி கோத்தாபய பணிப்பு



கொழும்பு, ஜூன் 3

**பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள், போதைப்பொருள்கடத்தல்காரர்களால்சிறைச்சாலைகளுக்குள் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.**

சிறைச்சாலைகளின் உள்ளக நிலைமைகள் தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சிறப்புக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
நாட்டுக்குள் இடம்பெறும் பெரும்பாலான குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் சிறைச்சாலைகளில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன என்று தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயம் தொடர்பாகக் கவலையடைகின்றேன்.
இந்த நிலைமை சீர்ப்படுத்தப்பட வேண்டும். சிறைச்சாலைகளுக்குள் தொலைபேசி பயன்படுத்துவது முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். சிறைச்சாலை மற்றும் பொலிஸ் துறைகள் பலவீனம் அடைவதன் மூலம் நாட்டின் சட்டத்தை நிலைநாட்டுவதில் பாதிப்புகள் ஏற்படுகின்றன.
சிறைச்சாலைத் திணைக்களத்துக்குள் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஊழல் மற்றும் செயற்றிறன் அற்ற அதிகாரிகளைக் கண்டறிந்து அவர்கள் தொடர்பான சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அந்தக் கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## மரண அறிவித்தல்



### ஏகாம்பரம் குணரெத்தினம்

**(இரத்தினம் களஞ்சியம் மாங்குளம்-கிளிநொச்சி முன்னாள் பிரபல வர்த்தகர்)**

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், சிவபிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் குணரெத்தினம் கடந்த (30.05.2020) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (தேவி-புங்குடுதீவு 12ஆம் வட்டாரம்) அன்புக் கணவரும் செந்தீபன் (இலங்கை), விமலரூபன் (லண்டன்), சஞ்ஜீபன் (கனடா), துஷீபன் (கனடா), சிந்துஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகா (இலங்கை), நந்தினி (லண்டன்), சுவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்னலட்சுமி, (இலங்கை), காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகநாதன் மற்றும் தங்கராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற ருக்குமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற நாகேசு, லோகசுந்தரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, சரஸ்வதி, சிங்கராசா, தனலட்சுமி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரன், தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு சகலனும், சவின், கிரிஷ், மகிஷ், மேஷிகா, ஆரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.
அன்னாரின் திருவுடல் கனடாவில் நேற்று (02.06.2020) செவ்வாய்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (03.06.2020) புதன்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைகள் Highland Hills Crematorium இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

**39/20, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல் : பெறாமகன்
தெய்வேந்திரன் சசிரங்கன்
077 622 2298**

## மரண அறிவித்தல்

**அன்னை மடியில்**
**13 . 12 . 1950**



**இறைவன் அடியில்**
**02 . 06 . 2020**

### திருமதி ரமணி செல்வராஜா

யாழ். கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரமணி செல்வராஜா நேற்று (02.06. 2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சொர்ண்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலாயுதபிள்ளை தம்பதியரின் மருமகளும், செல்வராஜாவின் (தபால் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், சோபிதனின் (சட்டத்தரணி) அன்பு தாயாரும், அலைமகளின் அன்பு மாமியாரும், அகரனின் அன்பு பாட்டியும், காலஞ்சென்ற சண்முகரத்தினம் (ஆசிரியர்) மற்றும் சொர்ணகாந்தி, காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் (பொறியியலாளர்) சொர்ணலிங்கம் (வைத்திய நிபுணர்), சோதிலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (03.06.2020) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயண் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.
செ.சோபிதன்**
+94775018195

# மாளிகாவத்தை துப்பாக்கிச் சூடு

-சூத்திரதாரி சிக்கினார்

கொழும்பு, ஜூன் 3
மாளிகாவத்த, லக்செத்த செவன மாடி வீட்டுத் தொகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி கொட்டாஞ்சேனை பகுதியில் வைத்து இராஜகிரிய சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர் 31 வயதுடையவர் என்றும், அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.